நன்னெறி நூல்

(சமயமும் சமூகமும்)

மேல் நிலைப்பள்ளி முதல் ஆண்டு

பதிப்புரிமை :

தமிழ் இலக்கியக் கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 001

1985

நன்னெறி நூல்

(சமயமும் சமூகமும்)

மேல்நிலைப்பள்ளி முதல் ஆண்டு

பதிப்புரிமை :

தமிழ் இலக்கியக் கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 001

1985

விலை:

தூய வளனார் அச்சகம், காந்திநகர், கும்பகோணம்-612 001.

பதிப்புரை

★

மனித வாழ்வை வளமுற ஆக்குவன சமய வாழ்வும், சமூக வாழ்வும். இவ்விரு வாழ்வும் இணைந்து செவ்வனே செயல்படுமாயின் மனிதன் சுபிட்ச வாழ்வை எய்திடுவான்.

அவ்வாழ்விற்கு வழிவகுக்க இப்புத்தகம் வெளி வந்துள்ளது. இன்றைய மாணவர்களே பிற் காலத்தில் தொழிலதிபர்களாகவும், தொழிலாளிக ளாகவும், நிர்வாகிகளாகவும், ஆள்வோர்களாகவும், தாய் தந்தையராகவும், ஆலோசனை அளிக்க, அறிவுரை கூற, அருள்வழி காட்ட வல்லவர்களாக வும் நல்லவர்களாகவும், திகழவேண்டியவர்கள்.

எனவே, சமயம், சமூகம் பற்றிய நெறி வாழ்வை நடை முறையில் கடைப்பிடிப்பது எவ்வாறென விளக்கும் இந்நூலை மேல்நிலைப் பள்ளி மாணவர் நன்கு பயன்படுத்தி மேன்மை அடைவார்களாக.

ஆசிரியப் பெருமக்களும் பேராதரவு அளிப் பார்களாக.

தமிழ் இலக்கியக் கழகம்,

திருச்சி.

பொருளடக்கம்

★

1. சமயம்

நாம் நமது தமிழகத்தில் எங்குச் சென்றாலும் சிறந்த உயர்ந்த கோயில்களையும், கோபுரங்களையும் காணாதிருக்க இயலாது. சென்னைக்குச் சென்றாலும், சிதம்பரம் சென்றாலும், சிரீரங்கம் சென்றாலும், மதுரை, திருச்செந்தூர், பழனி சென்றாலும் இந்துக்களுடைய கோயில்களும், கிறிஸ்தவர்களுடைய கோயில்களும், மசூதிகளும் தலைதூக்கி நிற்கின்றன. சிறிய ஊர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. ஊருக்கேற்ற சிறு கோயில்கள் சிற்றூர்களை அழகுபடுத்துகின்றன.

இக்கோயில்களில் எத்துணைக் கலையின்பம் பொங்கி வழிகின்றதெனில், அந்நிய நாட்டுக் கலைவல்லுநருங்கூட அவற்றின்முன் மலைத்து நிற்கின்றனர். ஆனால் நம் முன்னோர் இக்கோயில்களைக் கலைமன்றங்களாகவா அமைத்தனர்? அவர்களும் இந்நாள் மக்களும் ஆலயஞ் செல்வது கலைக்காகவா? இல்லை, இக்கோயில்கள் இறைவனின் உறைவிடம். புனித இடம் என்பதனால்தான் அங்குச் செல்கின்றனர். ஓர் அரும்பெரும் அற்புத ஆற்றல் அவ்விடத்தில் பரவி நிற்பதுபோன்ற உணர்வையே பெறுகின்றனர்.

வரலாறு சான்றாக, எக்காலத்திலுமே மக்கள் தங்கள் தேவைகளிலும், இன்னல் இடையூறுகளிலும் கோயில் சென்றனர். சூடம் கொளுத்தினர், தேங்காய் உடைத்தனர், சிலையைச்சுற்றி வலம்வந்தனர், காரணம், இவற்றால் தங்கள் குறைதீரும். இன்னல் அகலும் என்று நம்பினர். விரும்பியதைப் பெற்றபொழுது செய்த நேர்ச்சியை நன்றியுடன் தீர்க்கின்றனர், மாணாக்கர் தேர்வில் வெற்றிபெறப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதில்லையா? மாணாக்கரின் ஆழ்ந்த நம்பிக்கை என்ன? இறைவன் தங்களுக்குத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண் தரவேண்டும் என்பதன்றோ?

இவ்வாறு நடப்பவர் தனிமனிதர் மட்டுமல்லர். ஊரில் கொள்ளைநோய், மழையின்மை, பஞ்சம் போன்றவை

தலைகாட்டும்பொழுது ஊர்மக்கள் அனைவரும் திரண்டு பணம்தண்டி, கிடாயடித்து நைவேத்தியம் செய்து வேண்டு கின்றனர்.

கிறிஸ்துவ மக்களோ தங்கள் கோவிலுக்குச் செல்கின் றனர், திரி கொளுத்தி வைக்கின்றனர். மலர் சூட்டுகின்றனர். மண்டியிட்டு வேண்டுகின்றனர். இறைவழிபாட்டில் ஈடுபடு கின்றனர்,

ஆகையால், நம் தமிழ் மக்களின் வாழ்வில் கோயில் செல்வது, வேண்டுவது போன்றப் பலப்பல செயல்கள் இடம்பெறுகின்றன.

இப்போக்கின் அடிப்படை என்ன? மக்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியேயாகும், "அவனன்றி அணுவும் அசையாது"; அவரது துணையின்றி மக்களுக்கு வாழ்வு இல்லை; அவர் ஒருவரே மக்களின் தேவையனைத்தையும் நிறைவுபடுத்தக்கூடியவர்; அவர் ஒருவரே மக்களை இக்கட்டு களினின்று விடுவிக்கவல்லவர், துன்பத்தினின்று கைதூக்கக் கூடியவர்; இன்னல்களையும் இன்புடன் ஏற்று வாழ்க்கை நடத்துவதற்குத் திடன் அளிக்க வல்லவர் என்று மக்கள் இவைகளில் ஆழ்ந்த அசையாத நம்பிக்கை கொண்டிருக் கிறார்கள். ஒரே சொல்லில், சமயம் மக்களது வாழ்வின் மையமாக அமைந்துள்ளது.

ஆதலின் சமயமென்றால் என்ன? சமயம் என்பது கடவுளுக்கும் மக்களுக்குமுள்ள சார்பும் தொடர்பும். அதனின்று உதிக்கும் உரிமைகளும், கடமைகளுமேயாகும். மனிதன் கடவுள்மீது தனக்குள்ள சார்பை, எவ்வகையிலும் பிரிக்கமுடியாச் சார்பை ஏற்று. அதனைக் கொள்கைகளிலும் சடங்குகளிலும் வெளிப்படுத்துகிறான், இதுவே சமயம் (வேதம், மதம், மார்க்கம், மறை).

மனிதன் இயல்பாகவே பல வினாக்களுக்கு விடை கண்டறிய விழைகின்றான். கடவுள் யார்? மனிதன் யார்? அவனுக்கு இம்மை மட்டுமா? மறுமையுண்டா? கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள உறவு செயலினால்

முறிகின்றதா? அவ்வாறு முறிந்தால், மீண்டும் அவ்வுறவைப் பெறமுடியுமா? எங்ஙனம்? — இவைபோன்ற பல அவன் மனத்தில் உதிக்கின்றன. இவற்றிற்கு விடைகள் தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் சமய நூல்களில் உள்ளன. இவையே சமயக் கொள்கைகள், மக்கள் ஏற்கவேண்டிய சமய உண்மைகள்.

இந்தச் சமயக் கோட்பாடுகளை அன்றாட வாழ்வில் செயல்படுத்துவது எங்ஙனம்? ஒவ்வொருவரும் தன்னிச்சை யாகச் செயல்படுத்துவது முறையன்று. இதற்கென ஒவ்வொரு சமயமும் சட்டதிட்டம் பல வகுத்துள்ளது. இச்சட்டதிட்டங்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவையல்ல, ஒவ்வொரு சமயமும் தனித்தனி விதிகளைக் கொண்டுள்ளது. எடுத்துக் காட்டாக, ஒரு சமயம் புலாலை அனுமதிக்கும், மற்றொன்று அதை விலக்கும்; ஒன்று பல மனைவிகளை அனுமதிக்கும்; மற்றொன்று தடைசெய்யும், ஆனால், எல்லாச் சமயங்களும் சிலவற்றைப் பொதுவாக ஏற்றுக்கொள்ளும். எடுத்துக் காட்டாக, பெற்றோரை மதிப்பது; பிறர் சொத்தைச் சுரண்டா திருப்பது; கடவுளை வழிபடுவது; கொலை செய்யாதிருப்பது— இவை போன்றவை எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை.

நிற்க, ஒவ்வொரு சமயத்திலும் அதற்குரிய வழிபாடு முறையைச் சான்றோர் பல சடங்கு முறைகளாகத் திட்டம் செய்துள்ளனர். திருமணம், சாவு இதுபோன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் மக்கள் என்ன செய்யவேண்டும். எவ்வாறு செய்யவேண்டுமென்று மிக நுணுக்கமாகச் சடங்குகளைக் கொடுத்துள்ளனர்.

சட்டங்கள், சடங்குகள், கோட்பாடுகள் இருப்பினும், இவற்றால் ஒருவன் சமயப்பற்றுடையவன் எனக் கூற முடியாது. சமயத்துக்குரிய மிகமிக இன்றியமையாத பண்பு, சட்டங்களையும், சடங்குகளையும் அனுசரிப்பதன்று. மனிதன் தான் கடவுளைச் சார்ந்தவன் என்னும் பேருண் மையை ஏற்று அதற்கிசைந்தவண்ணம் நடப்பதேயாகும். படிப்பற்ற மக்கள்கூட கடவுளைப் பற்றிய தெளிந்த அறிவைக் கொண்டிராவிடினும், தங்களுக்கு மேற்பட்ட ஒரு பெரும்

ஆற்றலுள்ளவர் இருக்கிறார்; தங்கள் வாழ்வுக்கு அவரையே சார்ந்துள்ளவர்கள் என்பதை உணர்ந்து, அதன்படி நடந்து வந்திருக்கிறார்கள்.

எனவே, மனிதன் ஒருபுறம்; அவனுக்கு மேற்பட்ட அரிய உயரிய உண்மைப் பொருள் மறுபுறம் – இந்த இருவரிடையே ஏற்படும் உறவே, தொடர்பே, சமயம் எனப்படுவது. சமய உண்மைகளும், சட்டங்களும், சடங்குகளும் அந்த உண்மைப் பரம்பொருளை அவன் நன்கறியவும், அதனுடன் நெருங்கி உறவுகொள்ளவும் உதவுகின்றன. இந்தக் கொள்கைகள் சடங்குகள் ஆகியவற்றைக் காத்து வருவதற்காகவே மக்களில் ஒருசிலரைப் பிரித்தொதுக்கி: அவர்களைப் புரோகிதர்கள், பூசாரிகள், குருக்கள் என்று அழைத்தனர். சில மறைகளில் இது குடும்ப மரபுரிமையாயிற்று. இவ்வாறு, சமயம் ஒரு சமூக அமைப்பாக இடம் பெற்றுள்ளது.

ஆகையால், சமயம் என்பது கோட்பாடுகள், நடைமுறைச் சட்டங்கள், சடங்குகள் முதலியன அடங்கிய ஓர் அமைப்பு. இவற்றைக் காத்துவரவும் தம் வழித்தோன்றல்களுக்கு வழங்கவும், மக்கள்மீது ஓரளவு அதிகாரம் செலுத்தவும் குருக்கள் அமைக்கப்பெற்றுள்ளனர்.

வினா விடை

1. சமயம் என்றால் என்ன ?

கடவுளுக்கும் மக்களுக்குமுள்ள சார்பும் தொடர்பும் அதினின்று உதிக்கும் உரிமைகளும்; கடமைகளுமேயாகும்.

2. சமய உண்மைகள் யாவை ?

இறைவன், மனிதன், அவன் கதி இவை போன்றவற்றைப் பற்றிச் சமயம் கற்பிக்கும் உண்மைகளே சமய உண்மைகள் எனப்படும் ?

3. சமய வழிபாட்டு முறைகள் யாவை ?

இறைவனை வழிபடுவதற்காக உள்ள பல சடங்குகளும் சட்டங்களுமேயாகும்.

4. சமயத்தின் தலையான பண்பு எது ?

மனிதன் தான் கடவுளைச் சார்ந்துள்ளவன்: அவரன்றி அணுவும் அசையாது என்று ஏற்று நடப்பது.

5. சமய உண்மைகள், சடங்குகள் எல்லாம் எவ்வாறு காப்பாற்றப்பட்டு வருகின்றன ?

சமய நூல்களில் இவை யாவும் உள்ளன. அவற்றைக் காத்து அவற்றைச் செயல்படுத்துவதற்கெனச் சிலர் நியமனம் பெற்றிருக்கின்றனர். அவர்களைத்தான் குருக்கள் என அழைக்கின்றோம்.

---

2. கடவுள் உண்டா ?

சமயத்திற்கு அடிப்படை கடவுள்பற்று. ஆதலின் கடவுள் உண்டா என்ற வினா எழுகிறது.

1. முதல் காரணர் :

திருமணப்பந்தல், பந்தல் நடுவில் ஐந்து கிளை மின் விளக்கு தொங்குகிறது. பந்தலை எத்துணை அலங்கரித்திருக்கின்றார்களெனில், அந்த விளக்கு அந்தரத்தில் தொங்குவதுபோலக் காட்சியளிக்கிறது. மூன்றடி முத்துசாமியும், மூன்றே முக்காலடி முனிசாமியும் பந்தலின் அழகைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

முத்து: டேய் முனி, அந்த விளக்கு எப்படிடா தொங்குது ?

முனி: போடா போ, இதுகூடவா தெரியில்லே! அப்படியே ஒரு மாதிரி தொங்குதடா.

முத்து: பந்தலுக்குள்ளே மூங்கில்கீங்கில்லே அதைக் கட்டியிருப்பாங்கடா, இல்லாட்டி அது எப்படிடா தொங்கும் ?

முனி: போடா மக்கு, மூங்கிலுமில்லே, உன் தலையுமில்லே. அது அப்படியே தொங்குது 'ஒரு மாதிரி' நல்லா பாருடா !

மக்கு முத்துசாமிதான் தன்னைவிட முக்காலடி உயரமான முனிசாமிக்குமேல் அறிவைக் கொண்டிருப்பவன். விளக்கு எதையும் சாராது; தானாகத் தொங்க முடியாது என்பதை நன்குணர்ந்திருந்தான். அந்த மின் விளக்கைத் துணிகளும் மலர்களும் மறைத்துக் கொண்டிருப்பினும், அந்த விளக்கு அந்தரத்தில் தொங்க முடியாது. விளக்கு பல வளையங்களினாலான ஒரு சங்கிலியில் தொங்குகிறது. ஆனால், அச்சங்கிலி விளக்கைத் தாங்கவேண்டுமாயின், அது சங்கிலியில்லாத ஒரு பொருளில் பொருத்தப்பட வேண்டும். அந்தப் பொருள் ஓர் ஆணியாக இருக்கலாம்; மரமாக இருக்கலாம்; ஒரு கொண்டியாக இருக்கலாம் வேறெதுவாக இருப்பினும், அது சங்கிலியின் வளையமாக இருக்க முடியாது. ஏனெனில், அது வளையமாயின், கடைசி வளையம் எதில் பொருத்தப்பட்டிருக்கிறது என்ற வினா மீண்டும் எழும். ஆகையால், அந்த விளக்கைத் தாங்கும் சங்கிலி, சங்கிலி இல்லாத ஒரு பொருளாக இருக்க வேண்டுமென்றே பகுத்தறிவு தீர்ப்புக் கூறுகிறது.

இரயில் பெட்டிகளைப் பார்க்காத மாணாக்கன், எவனுமிருக்க முடியாது. சந்திப்பில் சற்றுமுன் அசையாது நின்ற மூன்று பெட்டிகள் இப்போது அசைகின்றன. எவ்வாறு அவற்றிற்கு முன் 'என்ஜின்' எனப்படும் ஓர் இயக்குப் பொறியைச் சேர்த்ததினால்தான். இயக்குப் பொறி முன் செல்லுகிறது; பெட்டிக்கோவை தொடர்கிறது. கடைசிப் பெட்டியை இழுப்பது எது? இரண்டாம் பெட்டி; இ'ண்டாம் பெட்டியை இழுப்பது முதல்பெட்டி; முதல் பெட்டியை இழுப்பது இயக்குப் பொறி, இயக்குப் பொறியை இழுப்பது எது? அது தானாக விசையில் இயங்குகிறது. எனவே பெட்டிக் கோவை ஓட வேண்டுமாயின், பெட்டியில்லாப் பொறி ஒன்று. இயக்குப் பொறி தேவை. அவ்வாறு பெட்டியில்லாத ஒரு பொருள் இல்லையெனில், பெட்டிக் கோவை அசையாது.

இப்பொழுது செயற்காரணத்தை ஆராய்வோம். செயற்காரணமின்றிச் செய்யப்பப்பட்ட காரியமில்லை என்னும் கோட்பாட்டை அறிஞரும் அறிவிலிகளும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகின்றனர். குடியானவன் வயலுக்குச் செல்கிறான். நன்றாக வளர்ந்துவந்த நாற்றுக்கள் வரப்போரத்தில் எரியப்பட்டுக் கிடப்பதைக் காண்கிறான். 'எந்தப் போக்கிரிப் பயல் வேலை இது'? என மனத்தில் கருவுகின்றான். இந்த நாற்றுக்கள் இடம் பெயர்ந்து தாமாக வரமாட்டா. அதற்குக் காரணம் வேண்டும் என்று அவனது பகுத்தறிவு கூறியுள்ளது.

மாணாக்கன் பள்ளியிலிருந்து வீடு திரும்புகிறான். தன் புத்தகங்கள் அறையின் பல இடங்களில் சிதறிக் கிடப்பதைக் காண்கிறான். சினம் கொள்கிறான், 'அம்மா, என் புத்தகங்களையெல்லாம் யார் இவ்வாறு எறிந்திருப்பது? என்று கேட்டவன், அறை மூலையில் நிற்கும் சிறிய தம்பியின் முதுகில் ஒன்று வைக்கிறான். ஏன், அந்தச் செயலுக்கு அச்சிறுவனே காரணம் என்பது அவன் தீர்ப்பு. காரணமின்றிக் காரியமில்லை.

ஆதலின், மனிதனின் பகுத்தறிவின் தீர்ப்பு யாதொரு செயற்காரணமின்றிச் செய்யப்பட்ட காரியமில்லை என்பதே. சிலர் தற்செயலாக நிகழ்ந்தது என்பர். அது பொருளற்ற விளக்கம். தற்செயல் என்றால் தன்செயல், அதாவது தானாக என்று பொருள். வழக்கில் எதிர்பாராத வகையில் என்ற பொருளில் அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம். காரணமின்றிக் காரியமில்லை என்ற கோட்பாடு உண்மையாயின் — அது உண்மையிலும் உண்மை; உறுதியிலும் உறுதி — நாம் காணும் இந்நிலைக்கும் வானுலகும், அவற்றில் விதியும் காண்பவை காணாதவை அனைத்தும் தாமாக வந்தன என்று கூறுவது பகுத்தறிவுக்கு ஏற்குமா? நமது ஆறாம்றிவின் தீர்ப்பு என்ன? அவை தாமாக உருவாகியிரா; அவற்றை உருவாக்கிய படைத்தோன் இருக்கவேண்டும். அவற்றிற்குச் செயற்காரணம் இன்றியமையாதது என்பதேயாகும். அந்தத் தனி முதற் செயற் காரணரையே கடவுள், இறைவன்,

ஈசுவரன், சர்வேசுரன், படைத்தோன், தம்பிரான் என்ற பல சொற்களினால் மக்கள் அழைக்கின்றனர். (தம்–தாமாக; பிரான்–ஆண்டவன், தாமாக இருக்கும் ஆண்டவர்.)

பெரும்பாலும் பயன்படுத்தும் கோழிமுட்டை என்னும் எடுத்துக்காட்டைக் கவனிப்போம், கோழி எதினின்று வந்தது? முட்டையினின்று. முட்டை? கோழியினின்று இவ்வாறு முட்டை கோழியினின்றும், கோழி முட்டையினின்றும் வருகிறது என்று சொல்லிக்கொண்டே இருந்தால், நமது பகுத்தறிவு அமைதி பெறுவதில்லை. முதலில் இருந்தது கோழியா, முட்டையா, என்ற வினாவை அது எழுப்புகிறது. முதலில் இருந்தது முட்டை என்போமாயின். அந்த முட்டை எவ்வாறு வந்தது என்பதற்கு விடைவேண்டும்; கோழி என்போமாயின், அது வந்தது எவ்வாறு என்பதற்கு விளக்கம் தேவை. இந்த வினாக்களுக்கு மீண்டும் கோழி, முட்டை என்று கூறுவதில் பொருளில்லை, அந்த முதல் முட்டையோ, முதல் கோழியோ முட்டையும் கோழியுமில்லாத வேறொரு பொருளினின்று வந்திருக்க வேண்டும், பெட்டிக் கோவையை இழுக்க இயக்குப்பொறி தேவை; சங்கிலி தொங்கச் சங்கிலியில்லாத ஒரு பொருள் தேவை என்று ஆராய்ந்ததை இங்கு நினைவு படுத்திக்கொள்ளவும்.

முட்டை, கோழி என்ற எக்காலக் கோவை ஒன்றிருக்க லாகாதா என்று கேட்பின், நித்தியகோவையை நம் பகுத்தறிவு ஏற்க மறுக்கிறது. அறிய வேண்டிய பொருளுக்கு விடை இல்லாமையால், அது நிறைவு கொள்வதில்லை. ஆதலின், இன்றைய கோழி இருப்பதற்கு எத்தனை ஆயிரம் ஆண்டு களாயினும், அதற்கு முன் முட்டையும் கோழியுமில்லாத் தனி முதற் செயற் காரணம் இன்றியமையாதது.

அந்தத் தனி முதற் காரணத்தையே கடவுள் என்கின்றோம்.

2. முதற்காரணர் அறிவுள்ளவர்

இந்த முதற்காரணராகிய கடவுள் ஒரு குருட்டு ஆற்றலா, அறிவுடையவரா என இப்பொழுது பார்ப்போம்.

கைக்கடிகாரம் கட்டிக்கொள்வது இன்றைய நாகரிகம். அதை வலக் கையில் கட்டிக்கொள்வது புது நாகரிகம். ஆங்கிலத்தில் அதை 'ரிஸ்ட் வாட்ச்' அதாவது மணிக்கட்டுக் கடிகாரம் என்றழைத்தனர்; மணிக்கட்டில் கட்டிக்கொண் டனர். நாம் அதைக் கைக்கடிகாரம் என்கிறோம். அதனால் தானோ என்னமோ, இன்றைய நாகரிகம் ஏறக்குறைய முழங்கையருகே கட்டுவது வழக்கமாயிற்று. நாகரிகம் எதுவா யினும், அந்தச் சிறிய கடிகாரத்தை நாம் திறந்து பார்த்த துண்டா? எத்தனை உருளைகள்! எத்தனை சிறு மறைகள் எத்தனை சுருள் வில்கள்! அவற்றை இயக்குவதற்கு விசைத் திருகாணி! அவை அனைத்தும் ஒன்றோடொன்று அழகாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆதலால்தான், கடிகாரம் செவ்வனே காலத்தைக் காட்டுகிறது.

அம்பிப்பயல் சிறுசிறு உருளைகளை வைத்து விளை யாடிக் கொண்டிருந்தான். சடுதியில் ஒரு கைக்கடிகாரமாக அவை அமைந்தன என்று ஒருவன் கூறின், நாம் நம்புவோமா? கூறின அந்த அறிஞனுக்குப் பட்டம் சூட்டி, எள்ளி நகைத்து வழியனுப்புவோம். ஏன்? ஏனெனில் அக் கடிகாரத்திலுள்ள நுண்ணிய வேலைப்பாட்டை ஆறறிவு படைத்த, அதிலும் மிகத் திறமை வாய்ந்த ஒருவன் மட்டுமே செய்திருக்கக்கூடும் என்று நமது பகுத்தறிவு தீர்ப்புக் கூறுகிறது.

எங்கு ஒழுங்கு உண்டோ, அங்கு அதைச் சீராக அமைப்ப தற்கு அறிவுள்ள ஒருவர் தேவை. ஒழுங்கைவிட, திட்டமிடு வதற்கு மிக்கக் கூர்மையான அறிவாற்றல் வேண்டும். திட்ட மிடுவது என்றால் ஓர் அமைப்புக்கு நோக்கம் கொடுத்து, பல பகுதிகளையும் ஒன்றோடொன்று பொருத்தி, ஒரே நோக்கத்தை நாடச்செய்வதாகும். கடிகாரத்தையே நோக்குவோமாயின், அதிலுள்ள பல உருளைகளையும் வில்களையும் பொருத்தி, காலம் காட்டும் நோக்கத்தை அதற் குக் கடிகாரக்காரன் கொடுத்திருக்கிறானென்பதைக் காண் போம். அவ்வாறு செயல்படுத்த எத்தனை அறிவு தேவை!

ஆதலின், ஒழுங்கு, திட்டம், முதலியவற்றைக் காணும் பொழுது, இவற்றைத் திட்டமிட்ட அறிவுள்ளவர் ஒருவர் கட்டாயம் இருக்கவேண்டுமென்று நம் பகுத்தறிவு கூறு கின்றது. அவ்வாறாயின், இந்த நிலவுலகையும் வானுல கையும் இத்துணைத் திட்டத்துடன் அமைத்துள்ள முதற் காரணர் எத்துணைப் பேரறிவுள்ளோராயிருக்க வேண்டும்!

இவ்வுலகை எடுத்துக் கொள்வோம். இது ஒரு மணிக்கு ஆயிரம் மைல் விரைவில் சுழல்கிறது. அதே வேளையில் நிமிடத்துக்கு 1080 மைல் விரைவு வீதம் கதிரவனைச் சுற்றி வருகிறது. கதிரவனோ நிலா, நிலவுலகு, இன்னும் பிற கோளினங்களுடன் வானவெளியில் ஒரு வான்மீனை நோக்கி ஓராண்டுக்கு நான்குகோடி மைல் வீதம் செல்கிறது. எத்துணை வியப்புக்குரிய ஒழுங்கு! திட்டம்!

கதிரவனைச் சுற்றும் நிலவுலகு திசை மாறிச் சென்ற துண்டா? வழி தவறி எந்தக் கோளினத்துடனும் மோதிக் கொண்டதுண்டா? அறிவற்ற சடப் பொருள்கள் இத்துணை முறையாக நாள் தவறாது இத்தனை ஆயிரமாண்டுகளும் செயல்பட்டு வருகின்றனவெனில், அவற்றை அமைத்தவரது பேரறிவையும் நுட்ப அறிவையும் ஆற்றலையும் போற்றாதுப் புகழாது மனிதன் இருக்கக்கூடுமா ?

மனிதனையே எடுத்துக் கொள்வோம்: அவனுள் ஏறக் குறைய 222 எலும்புகள் உள. அவன் உடலில் கோடிக்கணக் கான 'செல்' என்றழைக்கப்படும் உயிர் அணுவும் உண்டு. ஒவ்வொரு உயிரணுவும் நீரைக் கொண்டிருக்கிறது; நீரில் நீந்திக்கொண்டிருக்கிறது. மானிட உடலில் நூற்றுக்கு எழுபது வீதம் நீராம். நிற்க, 639 தசை நார்கள் உள்ளன. அனைத்தும் எத்துணைத் திட்டத்துடன் அழகாக அமைக்கப் பட்டுள்ளனவெனில், மனிதன் ஒருவனே; ஒரே ஆளாக இயங்குகின்றான். கையில் மருந்து ஊசி போட்டுக்கொள்ளு கிறான்; கால் வீக்கம் வடிகிறது. என்ன அமைப்பு! என்ன திட்டம்.

இத்துணைத் திட்டத்தையும் ஒழுங்கையும் அமைத்தவர் எத்துணைப் பேரறிவும் நுட்ப அறிவும் ஆற்றலும் கொண்டவராயிருக்கவேண்டும் ?

ஆகையால். முதற் காரணம் யாரையும் சாராது. நமது இயல்பின் சட்டாயத்தினால் தாமாக இருக்கிறது. அந்த முதற் காரணம் ஒரு குருட்டு ஆற்றலன்று; அது பேரறிவு படைத்த ஆதி; எல்லாம் அறிந்தவர். உள்ளத்தையும் கடந்தவர் படைப்புகளை நடத்துபவர். அந்த அறிவுள்ள முதற் காரணரே கடவுள் ஆவார்.

வினா விடை

1. கடவுள் முதற் காரணர் என்று எவ்வாறு எண்பிப்பது ?

காரணமில்லாது காரியமில்லை; அனைவரும் ஏற்றுக் கொள்ளும் கோட்பாடு. எனவே, நாம் காணும் பொருட்கள் எல்லாவற்றிற்கும் காரணம் வேண்டும். அவற்றை உண்டாக்கியவர் காரணமற்றக் காரணமாக, அதாவது முதல் காரணராக இருக்கவேண்டும்.

2. அந்த முதல் காரணம் குருட்டு ஆற்றலாயிருக்கலாகாதோ?

உலகில் அமைந்துள்ள ஒழுங்கு திட்டத்தினின்று இவற்றை அமைத்தவர் பேரறிவு படைத்தவராயிருக்க வேண்டும் என்று புலனாகிறது.

கடவுள் உண்டா ?

1. மாறும் பொருளும், மாறாப் பொருளும்.

கடற்கரையோரத்தில் ஒரு சிறுவன் தன்னந்தனியாக விளையாடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். உடனே, அவன் யாருடைய பிள்ளை என்று வினவுகிறோம்.

ஏ, பையா ! உன் அம்மா எங்கே ?

உம், உம், அம்மாவா, இல்லை.

உன் அப்பா ?

உம், உம், அப்பாவா, இல்லை

அம்மா அப்பா செத்துப்போயிட்டாங்களா ?

உம், எனக்கு அம்மா அப்பாவே இல்லை.

பாவம்! அறியாச் சிறுவன் ! நாம் அவன் சொல்வதை ஏற்றுக்கொள்வோமா ? அவனை நம்முடன் அழைத்துச் செல்வோம். அவனுடைய பெற்றோர் அல்லது உறவினர் யாரென்று விசாரித்து, அவனை அவர்களிடம் ஒப்படைக்க முன் வருவோம்.

வானுலகையும் நிலவுலகையும் நோக்குகிறோம். விஞ்ஞான ஆராய்ச்சியின்படி அவை எக்காலமும் இருந்தன வல்ல; ஒரு காலத்தில் தோன்றினவை. அவற்றிற்குத் தொடக்கமுண்டெனில், அவை அளவுள்ளவை; மட்டுள்ளவை. ஆகையால், தொடக்கமில்லாத, அளவற்ற, மட்டற்ற ஒரு கட்டாய, மாறாப்பொருள் இருக்கவேண்டுமெனக் கூறுகிறது பகுத்தறிவு.

நிலவுலகை எடுத்துக்கொள்வோம். அது உண்டாகுமுன் எங்கு இருந்தது ? அது ஒன்றுமில்லை.

ஒன்றுமில்லாதிருக்க, அது இப்பொழுது ஒரு பொருளாக இருத்தல் உடமையைப் பெற்றிருக்கிறதெனில், அதை எங்கிருந்து பெற்றது ?

அது தன்னிடமிருந்து பெற்றிருக்க முடியாது காரணம், அது தோன்று முன் எங்குமில்லை. ஒரு பொருளாகவும் இல்லை; இல்லாமை தனக்கு இருந்தால் உடைமையை வழங்க முடியாது.

அது பிற பொருளினின்று அந்த இருத்தல் உடமையை பெற்றது என்று கூறுவோமா ?

அந்தப் பிற பொருள் உண்டாகுமுன் இல்லாமை யாகத்தானே இருந்திருக்க வேண்டும், பழைய வினா மீண்டும் எழுகின்றதன்றோ ?

ஆதலின், தொடக்கத்தைக் கொண்ட பொருள்கள், இருந்து மறையும் பொருட்கள் அனைத்தும் தாமாக, யாரையும் சாராது. தமது சொந்த இயல்பின் ஆற்றலினால் முக்காலமும் எக்காலமும் தொடக்கமும் முடிவில்லா ஒரு கட்டாயப் பொருளினின்று வந்திருக்கவேண்டும். அந்தக் கட்டாயப் பொருளே கடவுள் ஆவார்.

உ. மனச்சான்று

மனிதனுக்கு அறிவுண்டு; மனதுண்டு; தன்னுரிமையுண்டு அவன் தன்னுரிமையைப் பயன்படுத்தி, நன்மையை நீக்கித் தீமையை நாடக்கூடும். ஆனால் நமது அறிவு ஒரு நடுவர் போல் நம் உள்ளத்தில் அமர்ந்து, இது நல்லது, இதைச்செய், அது தீயது, அதைச் செய்யாதே என எச்சரிக்கிறது. நல்லதைச் செய்தால் மகிழ்ச்சி தருகிறது; தீயதைச் செய்தால் மனக்குத்தலைத் தருகிறது. இதையே நாம் மனச்சான்று எனக் குறிப்பிடுகிறோம்.

மன்னும் மனச்சாட்சி மன்னவன் சொல் என்ன என்
உள்ள நடத்தல் உயர்வு. — (சுத்தானந்தபாரதி)

தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தெளிரே. — (கம்பர்)

தக்கவை இவை தகாதவை இவை எனப் பொருத்தமாக எண்ணிச் செய்யாதவர்கள் மக்கட் பிறப்பினராயினும் விலங்குகளாவர், மக்கட்குரிய நன்னெறியைக் கடைப்பிடிக்கும் விலங்குகளும் தேவ மக்களே என்று பாடுகிறார் கம்பர்.

இம் மனச்சான்று நாகரிக மக்களுக்கும் கற்றோர்க்கும் மட்டுமே உரியது என்று எண்ணுவது தவறு; இன வரலாற்று வல்லுநரும் வரலாற்றாசிரியரும் பல ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியின் பயனாக நன்மை தீமையறியாத மக்களினம் ஒன்றுமேயில்லை எனத் தெளிவுறக் கூறியுள்ளனர். பல நுணுக்கங்களில் பலப்பல வேற்றுமைகள் உள்ளன எனினும்

நல்லதை நாடித் தேடவேண்டும். தீயதை அறவே அகற்ற வேண்டும் என்பதில் அனைவரிடமும் ஒருமைப்பாடு காணப் படுகிறது.

மனச்சான்று எளிதில் மறப்பதில்லை. கொலை புரிந்த ஒருவன் எத்தனை கேளிக்கைகளில் ஈடுபடினும் அதை மறக்க எத்துணை முயன்றிடினும், அவனால் இயலாது.

மனச்சான்று உறுதியுடன் ஆணையிடுகிறது. வணக்க இணக்க வகையில், மெல்லிய குரலில் அது தன் கருத்தைத் தெரியப்படுத்துவதில்லை. அழுத்தந் திருத்தமாக, உரிமை யுடன் இதைச் சொல். அதைச் செய்யாதே என்று ஆணை யிடுகிறது.

மனச்சான்று நமக்கு மேலான ஒருவரைச் சுட்டிக் காட்டுகிறது. நாம் எந்தத் தனிமையில் கும்மிருட்டில் யாரும் ஐயுறாவண்ணம் ஓர் அநீதியைப் புரிந்திடினும் மனச்சான்று இத்தகைய தீயச் செயலினால் நமக்கு மேலான ஒருவரை நோகச் செய்தோமே எனச் சுட்டிக் காட்டி நமது உள்ளத்தைத் துளைக்கிறது நாம் தண்டனைக்குரியவர் என்று அச்சுறுத்துகிறது.

பகுத்தறிவின் தீர்ப்பு என்ன? இந்தச் சட்டத்தை நம்முள் வைத்தவர் யார்? அந்தக் காரணர் யார்?

1. நாமாயிருக்க வேண்டும்.

2. அரசு அச்சட்டத்தைத் தீட்டியிருக்க வேண்டும்.

3. சமூக வழக்கில் அது இடம் பெற்றிருக்க வேண்டும்.

4. இறைவன் மனித இயல்பில் அமைந்திருக்கவேண்டும்.

5. காரணம் நாம் அல்லர்: காரணம், மனச்சான்று நம்மையும் மீறிக் கட்டளையிடுகிறது. தீமையை நாம் எத்துணை விரும்பிச் செய்திடினும், அது நம்மைக் குத்தித் துளைக்கிறது. அச்செயல் நமக்கு நல்லது. நமக்குத் தேவையுள்ளது என்று எத்துணைச் சமாதானப்படுத்

திடினும், மனச்சான்று நம்மை வளரவிடுவதில்லை. சட்டத்தை அமைத்தவர் நாமென்றால் நாம் தலைவர்: மனச்சான்று நமக்குப் பணியவேண்டும். ஆனால் மெய்யாகவே நாம்தாம் மனச்சான்றுக்கு உட்படுகிறோம் ; பணிகிறோம். ஆதலின் நாம் காரணம் அல்லர்:

2. அரசும், அன்று : வரலாற்றின்படி அரசுக்கு முன் குடும்பங்களும் தனி மக்களும் இருந்தனர், ஆதலின், அரசு உருவாகி, ஓர் அமைப்பாக இடம் பெறு முன்னரே, மனச்சான்று இயங்கிற்று மேலும் அரசு கட்டுப்படுத்தாத காட்டு மக்கள் இன்றும் வாழ்கின்றனர்; அவர்களும் மனச்சான்றுக்கு அடங்கியுள்ளனர். நிற்க, அரசுக்கு எத்தகைய உரிமையுமில்லாத தனி மனிதனின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் தீய எண்ணங்களையும் மனச்சான்று கண்டிக்கிறது. ஆதலின், அரசும் காரணமில்லை.

3. சமூக வழக்கும் அன்று : சமூகமும் வழக்கும் நாட்டுக்கு நாடு மாறுகின்றன. ஆனால், நன்மையைச் செய், தீமையைச் செய்யாதே என்னும் சட்டம் எக் காலமும் எல்லா மக்களிடையிலும், எல்லா நாடுகளிலும் ஆட்சி புரிந்து வருகிறது. ஆதலின், மாறும் சமூகம் மாறாச் சட்டத்தின் காரணமாயிருக்க முடியாது.

4. கடவுளே காரணம் : ஆகையால் உள்ளங்களைக் கடந்து நிற்கும், முக்காலமும் மாற்றமில்லாது தாமாக இருக்கும் கடவுளே மனிதனின் இயற்கையில் இச்சட்டத்தைப் புகுத்தியவர். அவரே மனச்சான்றின் காரணர் என்பது தெளிவாகிறது.

மக்களின் சான்று

இன வரலாற்று வல்லுநர் பல நாடுகளில் பற்பல காலத்தில், வெவ்வேறு பண்பாடுள்ள, மக்களிடையே ஆராய்ச்சியின் முடிவு. எல்லாக் காலத்திலும், எல்லா மக்களிடத்திலும், எல்லா நாகரீகத்திலும் கடவுள் நம்பிக்கை இருந்து வந்துள்ளது என்பதேயாகும். கடவுள் இல்லையென்றோர் எத்துணைச் சொற்பமெனில், கடலில் கரைத்த துளிப் பெருங்

காயத்துக்கு அவர்களது எண்ணிக்கையை ஒப்பிடலாம். கடவுளின் தன்மையைப்பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்துகள். அவரை வழிபடும் முறைகள் வேறுபட்டனவாயினும், தங்களுக்கு அப்பால் ஓர் உயரிய அரிய ஆற்றல் கொண்டவர் உண்டு என்பதிலும், தாங்கள் அவருக்குட்பட்டவர்கள் என்பதிலும் மக்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததேயில்லை.

கிறிஸ்துவுக்குப் பலப்பல ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்ராயேலர். யாவே என்ற கடவுளை வழிபட்டனர். பபிலோனியர் மாத்துக் என்பவரைக் கடவுளாகக் கொண்டுள்ளனர். உரோமையரது கடவுள் ஜூபீட்டர். கிரேக்கருடைய தலைமையான கடவுள் சேயுஸ், சீனர்களில் பலர் இன்று நாத்திகரென்ற போதிலும், எப்பொழுதும், ஷாங்டீ என்னும் கடவுளை வழிபட்டனர்.

நம் தமிழகத்தை எடுத்துக்கொண்டால், கோயில்களும் கோபுரங்களும் இலக்கியமுமே தமிழரது இறைப்பற்றைப் பறைசாற்றுகின்றன.

அகர முதல வெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே வுலகு.

எழுத்துகளெல்லாம் அகரமாகிய முதல் எழுத்தைக் கொண்டிருப்பது போன்று உலகம் கடவுளையே முதலாகக் கொண்டிருக்கிறது என்று முதல் குறளிலேயே திருவள்ளுவர் கூறியுள்ளார். அத்துடன் நிற்காது. முதல் பத்துக் குறள்களையும் கடவுள் வாழ்த்துக்குப் பயன்படுத்தியுள்ளார். மேலும், இறைவழிபாடில்லாதவன் பல நூல்களைக் கற்பதனால் யாதொரு பயனும் அவனுக்கில்லை என வரைந்துள்ளார்,

கற்றதனால் ஆய பயன் என்கொள் வால் அறிவன்
நற்றான் தொழாஅர் எனின்,

கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த வேதநாயகம் பிள்ளை பாடியுள்ளதாவது :

கதிரவன் கிரணக் கையால்
　　கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியோடு மாடிப் பாடித்
　　துதிர் செய்யும்; தருக்களெல்லாம்
பொதி அலர் தூவிப் போற்றும்;
　　பூத மதம் தொழிச்செய் தேத்தும்;
அதிர் கடலொலியால் வாழ்த்தும்;
　　அகமே! நீ வாழ்த்தாத தென்னே !

கதிரவன், பறவைகள், செடி கொடிகள்; பூமி, கடல் அனைத்தும் கடவுளைத் துதிக்கும் பொழுது, நீ மட்டும் அவரை வாழ்த்தாது என்னே என்று கேட்கிறார்.

தனித்தனி முக் கனிபிழிந்து வடித்தொன்றாகக்கூட்டி
　　சர்க்கரையும் கற்கண்டில் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
　　தனிப்பாலும் சேர்த்த ஒரு தீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
　　எடுத்து சுவைக் கட்டியினும் இனித்திடும்
　　　　　　　　　　　　தெள்ளமுதே
அநித்த மறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசே
　　அடிமலர்கென் சொல்லணியாம் அலங்கணிந்தருளே.

மா, பலா கனிகளைப் பிழிந்து, வாழைப்பழத்தைப் பிசைந்து இம்முக்கனிக்கலவையில் சீனியும் கற்கண்டும் கலந்து, தேனை ஊற்றிக் காய்ச்சிய பசும்பாலையும் கலந்தால் எத்துணை இன்சுவையாக அமையும்! அத்துடன் இனிய பருப்பும் நல்ல நெய்யும் ஊற்றி, அடுப்பில் ஏற்றி இளஞ் சூட்டுடன் இறக்கினால் அதன் சுவையைக் குறித்துக் கூறவும் வேண்டுமோ? இம முக்கனிக கலவையைவிட மிக மிகச் சுவையுள்ளது. கடவுள் என்னும் நல்லமுது எனப் பாடி யுள்ளார் வடலூர் இராமலிங்க அடிகளார்.

தமிழரின் இறைப்பற்றுதான் என்னே!

இவ்வாறு அனைத்துலக மக்களிடமும் எல்லாக் காலத்திலும் உள்ள இந்தக் கடவுள் பற்றுக்கு ஏற்ற ஓர் இறைவன் உண்மையாகவே இல்லையெனில், மானிடத் தனி அறிவாற்றல் எல்லா மக்களையும், எல்லா காலத்திலும் ஏமாற்றிவிட்டது என்று கூறவேண்டும். இதை எந்தப் பகுத்தறிவுள்ளவனும் ஏற்க இயலாது. ஏனெனில் மானிட அறிவு உண்மையை உணர்த்தும் ஆற்றல், அது உண்மையை அடைகிறது என்பதற்கு விஞ்ஞான வளர்ச்சியும், வானவெளி ஓட்டமும், கலை வளமுமே சான்று கூறுகின்றன. ஆதலின், மானிட அறிவு சுட்டிக்காட்டும் பொருள் உண்மையாகவே உண்டு. அந்தப் பரம்பொருளே கடவுள் ஆவர்.

இங்கு ஆங்கில அறிஞர் திரு. செஸ்டர்டன் கூறிப் போனது குறிப்பிடத்தக்கது.

எல்லா மக்களும் ஓரோர் காலத்தில் ஏமாறக்கூடும்; ஒரு சில மக்கள் எல்லா காலத்திலும் ஏமாறக்கூடும்; எல்லா மக்களும் எல்லாக் காலத்திலும் ஏமாற முடியாது.

வினா விடை

1. உலகிலுள்ள மாறும் பொருளினின்று கடவுள் உண்டென்று எவ்வாறு எண்பிப்பது?

மாறும் பொருள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றியது என்றால், தொடக்கமில்லா, மாறக்கூடாதக் கட்டாயப்பொருள் இருந்தாலன்றி அதன் இருப்புக்கு விளக்கம் தரமுடியாது.

2. மனச்சான்றிலிருந்து கடவுள் உண்டு என்று மெய்ப்பிக்கக் கூடுமா?

நன்மையைச் செய், தீமையை அகற்று என்று ஆணித்தரமாக ஆணையிடுகிறது. மனச்சான்று எல்லா மக்களுக்கும் பொதுவாயிருப்பது சட்டத்தைத் தீட்டிய பரம்பொருள் ஒருவர் இருக்க வேண்டுமெனக் காட்டுகிறது.

3. கடவுள் உண்டு என வரலாற்றிலிருந்து சான்று உண்டோ?

எல்லா மக்களிடையே எக்காலத்திலும் கடவுள் உண்டு என்று எண்ணமுள்ளது. தமிழக இலக்கியமும் கலையும் கோயில்களுமே இறைப்பற்றுக்குச் சான்று கூறுகின்றன.

---

4. சமயம் தேவையா?

ஒரு நிகழ்ச்சி அமெரிக்காவில் நடந்தது ஓர் அமெரிக்கப் பெண் அருகிலுள்ள நகருக்கு அலுவலாகச் சென்றாள். அவள் சென்ற நாள் நகரில் ஒரே குழப்பமும் கலகமுமா யிருந்தது. நீக்ரோ மக்கள் சம உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். வெள்ளையரைத் துன்புறுத்தினர். அந்தப் பெண் ஊர்தியிலிருந்து இறங்கிச் சற்று நடந்தாள். உடனே அவளை விடாதே என்று கையில் கழிகளைக் கொண்ட ஒரு சிறு கூட்டம் அவளை நோக்கி ஓடி வந்தது. ஒரு முரட்டுக் கை அவளைப் பிடித்தது. "முதலில் அவளை நான்தான் பார்த்தேன். ஆதலால் அவளை என்னிடம் விட்டுப் போங்கள்" என்று ஒரு நீக்ரோ இளைஞன் கூச்சலிட்டான். அவள் நடுங்கினாள், அவனது பிடியினின்று தப்புவிக்க முயன்றாள். அவன் அவளைத் தன் ஊர்தியினுள் தள்ளி அதை விரைவாக ஓட்டினான். மதி கலங்கி, திகில் பிடிக்க, உடல் நடுங்க, உள்ளம் துடிக்க கண்ணீர் சொரிந்து என்ன காத்திருக்கிறதோ என்று அஞ்சி உட்கார்ந்திருந்தாள்.

அந்த இளைஞன் புன்முறுவலுடன் "உங்கள் வீடு எங்கே சொல்லும்" என்றான். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம்? ஏன் இந்த சலுகை? என விம்மலுக் கிடையில் திக்கினாள்.

அவனது முகம் மகிழ்ச்சியினால் விரிந்தது. என்னைத் தெரியவில்லையா? டென்னி! நினைவில்லையா! மருத்துவ

நிலையத்தில் உடல் நலத்திற்காக நீர் வந்திருந்த காலத்தில் அதே பகுதியிலிருந்த என் பாட்டிக்குத் தலைவாரிவிட்ட அந்தப் பெருமாட்டி நீர்தானே! நான் அலுவலாக இந் நகருக்கு வந்தேன். நீர் ஆபத்திலிருப்பதைக் கண்டேன். ஓடிவந்தேன். அவ்வாறு நடித்தேன். உம்மைக் காப்பாற்றி னேன்" என்றான் அந்த நீக்ரோ இளைஞன். என்ன நன்றி!

அவன் இந்தப் பெரும் நன்மையைச் செய்து, அந்த அமெரிக்கப் பெண்ணைக் கொடியவர் பிடியிலிருந்து காப் பாற்றியதின் காரணம் என்ன! நன்றியுணர்வு! அவனுடைய பாட்டிக்கு அந்தப் பெண் செய்த சேவைக்குக் கைம்மாறு செய்வதற்கே.

நாம் பிறவாதிருப்பின் அல்லது நாமே நம்மை உருவாக்கி உலகிற்கு வந்திருந்தோமாயின், சமயத்திற்கு இடமே இராது. ஆனால், நாம் நமது ஆற்றலினால் வரவில்லை. மக்கள் அனைவரும் கடவுளைச் சார்ந்துள்ளோம் என்று பார்த்தோம். அவரன்றி அணுவும் அசையாது; நம்மால் அசைக்கவும் முடியாது. மீன் நீரில் வாழ்கிறது; மனிதன் இயற்கைச் சூழ் நிலையில் காற்றினிடையே இருக்கின்றான். அவ்வாறே, மக்கள் கடவுளில் வாழ்கின்றார்கள்; அவரில் அசை கின்றார்கள்; அவரில் இருப்புக் கொள்ளுகின்றார்கள் ஒவ்வொரு கணமும் இறைவன் நமக்குத் தேவை.

ஆதலின், மனிதன் யாருக்குச் சொந்தம்? அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்கு மேல் இறைவனுக்கே அவன் சொந்தம். அவருக்கு ஒவ்வொரு மனிதன் மீதும் தன்னுடைமைக்காரனுக்குரிய உரிமைகள் அனைத்தும் உள்ளன. கடவுள் மனிதனின் நன்கொடையாளர்; மாபெரும் வள்ளல் அவனைப் படைத்தோர்.

பெற்றோர் பிள்ளையைப் பெற்ற வினாடியிலிருந்தே பிள்ளையைப் போற்றி வளர்த்து ஆளாக்கிச் சமூகத்தில் ஓர் இடத்தை வகுப்பதற்குப் பயிற்சியளிக்க வேண்டிய கடமைகள் அனைத்தும் உதிக்கின்றன. பிள்ளைகளுக்கும் பெற்றோரை மதித்து நேசித்து அவர்களுக்குப் பணிந்து அவர்கள் முகம்

கோணாது நடக்கவேண்டிய கடமைகள் ஏற்படுகின்றன. பெற்றோருக்குக் கடமை உண்டென்றால்: பிள்ளைகளுக்கு அவற்றிற்கு உரிமையுண்டு. பிள்ளையின் கடமையென்றால் பெற்றோருக்கு அது உரிமையாகிறது. அவ்வாறே மனிதன் உலகில் தோன்றின வேலையிலிருந்தே படைத்தோருக்கும் படைப்புக்கும் கடமைகளும் உரிமைகளும் ஏற்படுகின்றன.

கொலுக்கட்டைக் குறிச்சி குருட்டுக் குப்பன் இலுப்பூர் இரங்கத்தாளை நேசிக்கிறான். பெரியோர் குறிப்பிட்ட நாளில் அவன் கழுத்தில் தாளியைக் கட்டுகிறான். அவன் மூன்று முடிச்சுப் போட்டவுடனே, இருவரும் கணவனும் மனைவியுமாகின்றனர். மனைவியின் உறவினர் கணவனுக்கும் உறவினராகின்றனர். அவளுடைய தாய் அவனுடைய மாமியாள். அவளுடைய தகப்பன் அவனுடைய மாமனார், அவளுடைய அண்ணன் தம்பிகள் அவனுடைய மைத்துனர். அதுபோலவே, அவளுடைய மாமியார், மாமனார் கொழுந்தனார், நாத்தியார் என்று உறவுகள் ஏற்படுகின்றன. எவ்வாறு யாருடைய தூண்டுதலினாலே? புரோகிதரின் அணையின்படியா? இல்லை. மாலையை மாற்றி தாலியைக் கட்டின வினாடியிலிருந்தே எல்லா உறவும் சம்பந்தமும் ஏற்படுகின்றன. அவன் அவளை வாழ்க்கைத் துணைவியாகக் கருதவேண்டும். உணவு, உடை, உறைவிடம் தரவேண்டும். அவளுக்கு வஞ்சகம் நினையாது பிறர் முகம் பாராது. அவளை நேசித்து அவளுடன் அன்புடன் வாழவேண்டும். இவை அவனுடைய கடமைகள்; ஆகையால் அவளுடைய உரிமைகள். இரங்காத்தாலோ குருட்டுக் குப்பனை நேசித்து, அவளது இல்லத்து அரசியாக வாழவேண்டும்; அவனுக்குப் பணிந்து நடக்கவேண்டும்; தக்கவேளையில் உணவு படைத்துப் பரிமாறவேண்டும். இவை அவளுடைய கடமைகள்; எனவே அவனுடைய உரிமைகள்.

அதுபோலப் படைத்தோருக்கும் படைப்புக்கும் உடனே உறவு ஏற்படுகிறது. அறிவின்றி உரிமைகளும் கடமைகளும் உதிக்கின்றன. இந்த உரிமைகளையும் கடமைகளையும் கடவுள் விட்டுக்கொடுக்கவும் இயலாது; மனிதன் மறுக்கவும்

முடியாது. கொட்டாப்புளி பெரியசாமி மிகத் தறுதலையாக நடப்பான். வீட்டில் பெற்றோர் கண்டித்தனர். கொட்டாப் புளிக்குச் சினம்பொங்கி வடிந்தது. பெற்றோரை வாயாரத் திட்டினான். நீங்கள் என் அப்பனுமில்லை, அம்மாவுமில்லை நான் உங்கள் பிள்ளையுமில்லை என்று சொல்லி பீடுநடை போட்டு போருக்கு ஆலெடுக்கும் நிலையத்திற்கு நேரே சென்றான்.

அதிகாரி : உன் பெயர் ?

பெரியசாமி : பெரியசாமி.

அதிகாரி : உன் தகப்பன் பெயர் ?

பெரியசாமி ; இரங்கசாமி.

கொட்டாப்புளி தன் தந்தையிடம் 'நீ என் அப்பன் இல்லை' என்று அத்துணை 'உறுதியுடன் வந்தானே இங்கு ஏன் அவர் பெயரைக் கொடுக்கவேண்டும் ? அவருடைய மகன் என்று கூறவேண்டும். ஏனெனின் பெற்றோருக்கும் பிள்ளைக்குமுள்ள உறவை எவராலும் பிரிக்கமுடியாது; அதனை எவரும் மறுக்கமுடியாது. அவ்வாறு மகனின் சண்டித்தனத்தைக் கண்டு பெற்றோர் நீ எங்கள் பிள்ளை இல்லையென்பதனால், உறவு முறிவுபடுவதில்லை. இது போலவே, கடவுள் மக்களைப் பார்த்து. நீங்கள் என்னை வழிபடவேண்டாம்; எனக்கு நன்றியும் தேவையில்லை; எனக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று தம் உரிமையை விட்டுக்கொடுக்க இயலாது; மக்களும் தாங்கள் படைப்புயிற் என்பதனை மறுத்தாலன்றி, படைத்தோருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைக் கைவிடவும் முடியாது. கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள இந்த உறவும், உரிமைகளும் கடமைகளுமே சமயம் என்பது. ஆதலின், சமயம் இன்றி யமையாததென்பது தெளிவு.

நீதியின்படி சமயம் இருத்தல் வேண்டும். நீதியென்றால் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ளதைக் கொடுப்பதாகும். நீ பேசிய கூலியை வேலைக்காரனுக்குக் கொடுப்பது கடமை அதைப் பெறுவதற்கு அவனுக்கு முழு உரிமையுண்டு. அந்தக்

கூலி உன் அன்பின் மிகுதியானாலன்று; இரக்கப் பெருக்கத்தினாலுமன்று. பேசியதற்கு மேல் கூடுதலாகக் கொடுத்தாயானால். அது அன்பாகும்; இரக்கமாகும். பேசியதைக் கொடுப்பதோ கடமை. நீ சட்டத்தை மீறுகிறாய் உன்னைத் தண்டிக்கின்றனர். குற்றத்திற்குத் தண்டிக்கப்படுவது நீதி, நீ ஒருவன் பொருளைத் திருடுகிறாய் நீதி அவனுக்குரிமையான அப்பொருளைத் திரும்பக் கொடுக்கச் செய்கிறது.

அவ்வாறாயின், கடவுள் விண்ணையும் மண்ணையும் உண்டுபண்ணி, மக்களை உருவாக்கிக் காத்து நடத்தி வருகிறாரே, அவர் எல்லாவற்றிற்கும் கர்த்தர் அல்லவா? நம்மீது அவருக்கு ஆளும் உரிமை உண்டல்லவா? இந்த அவரது உரிமையை நாம் ஏற்று, நடைமுறையில் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இதுவே சமயம்.

பாடலிபுரத்துக் கல்வெட்டுகளை அயல் நாட்டுக் கலைஞர்கள் பார்க்கிறார்கள். அக்காலத்திலும் இத்துணை நுட்ப வேலைப்பாட்டைச் சாதிக்கவல்ல சிற்பிகள் இந்திய மண்ணில் உதித்துள்ளார்களா என வியப்புறுகிறார்கள். பற்பல கோயில்களையும் கோபுரங்களையும் நோக்குகிறார்கள் இக்கால முன்னேற்றக் கருவிகள் இல்லாத அக்காலத்தில் இத்துணை உயர்ந்த கோபுரங்களை எவ்வாறு கட்டியுள்ளார்கள்; இத்துணை நீண்ட கருங்கற்களை எவ்வாறு உயர எடுத்துச் சென்றார்கள் என்று ஆச்சரியப்படுகின்றனர். சிற்பிகளையும், கட்டட அமைப்பியலார்களையும் பாராட்டுகின்றனர். அவ்வாறாயின் உயர்ந்த மலைகளையும் குன்றுகளையும் கற்கள் அமைந்தது போன்று வானையும் அமைத்து நிலத்தில் வகைவகையான செடிகொடிகளையும், ஊர்வன, பறப்பனவற்றையும் உண்டாக்கிய மாபெரும் சிற்பியாம் கடவுளைப் போற்றிப் புகழ்வது நீதியன்றோ? ஒவ்வொருவருக்கும் உரியதைத் தருவது நீதியெனில். கடவுளுக்கு மனிதன் துதி, மரியாதை, வணக்கம் அனைத்தும் தெரிவிப்பது நீதியல்லவா? துதி, மரியாதை, வணக்கம் இவை யாவும் சமயச் செயல்களே?

நன்றியுணர்வும் சமயமும் இன்றியமையாதத் தன்மையைக் காட்டுகிறது. நன்றி மறப்பது நன்றன்று ... ... என்பது தமிழனின் தனி மரபு. நாம் பெறும் நன்கொடைகளை ஒப்புக்கொள்ளுதலே நன்றியாகும், நாம் கடவுளிடமிருந்து பெற்றுள்ள கொடைகள் எத்தனை! மனிதனையும் விலங்கையும் பிரிக்கும் ஆராமறிவு நமக்கே உரிய உயர்ந்த தலை சிறந்த கொடையன்றோ? இவ்வுலகும் அதன் பொருள்களும் எங்கிருந்து வந்தன? கிறிஸ்துவத் திருநூலில் காணக் கிடப்பதாவது; உன்னைச் சிறப்புள்ளோனாக்கியவன் யார்? நீ பெற்றுக்கொள்ளாத ஏதேனும் உன்னிடம் உண்டோ? நீ பெற்றிருக்க, பெற்றுக்கொள்ளாதவனைப் போல் நீ மேன்மை பாராட்டுவது ஏன்? ஆதலின் இறைவனுக்கு நம்முடைய நன்கொடையாளருக்கு எத்துணை உள்ளப் பெருக்குடன் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். சமயச் செயல் நன்றி கூறுதலாகும்.

ஒழுங்கு முறையே சமயம் இன்றியமையாதது என்று விளக்குகிறது. மனிதன் என்றும் எங்கும் அமைதியை நாடுகிறான். அந்த அமைதி ஓங்கித் துலங்க வேண்டுமாயின், எல்லாம் தம் தம் அலுவலை ஒழுங்குமுறையாகச் செய்து, பிறர் உரிமையில் குறுக்கிடாதிருப்பது முக்கியம்

கடவுள் எல்லாப் படைப்புக்களின் கர்த்தன் என்று நாம் ஏற்றுக்கொள்ளும்பொழுது, படைப்புயிராகிய நம்மீது அவருக்கு உரிமையுண்டு. நமக்கு நம் உயிர், உடல் சொத்து ஆகியவற்றின் மீதுள்ள உரிமைகளின் காரணக் கர்த்தரும் அவரே என்று ஒப்புக்கொள்கிறோம். அவரே நேரடியாக மனச்சான்றின் வழியாகவும், மறைமுகமாக அரசின் நீதியுள்ள சட்டங்கள் வழியாகவும், நம்முடைய இவ்வுரிமைகளைக் காத்து வருகிறார். அவர் பிறருக்குக் கொடுத்துள்ள உரிமைகளைக் காப்பது நமது கடனாகிறது.

ஆதலின், நாட்டிலும் வீட்டிலும் உள்ளத்திலும் அமைதியை விரும்பும் அனைவரும் தம்தம் உரிமைகளைப் பயன்படுத்த உடன்படவேண்டும்; அவர்களுடைய உரிமை

களை மதிக்க வேண்டும். எனவே, நாம் கடவுளைப் போற்ற வேண்டும்; அவருடைய உரிமைகளுக்கு இணங்க வேண்டும்; பிறர் உரிமைகளைக் காக்க வேண்டுமென ஒழுங்குமுறை நமக்குக் கற்பிக்கிறது, சமயமோவெனில் கடவுளுக்குரிய உரிமைகளைப் போற்றி அவரை வழிபடச் செய்கிறது.

வினா விடை

1. சமயம் தேவையா?

ஆம், நீதி, நன்றி, ஒழுங்கு யாவும் சமயம் இன்றியமை யாததைக் குறிக்கின்றன.

2. நீதி எவ்வாறு இன்றியமையாததாக்குகிறது?

நம்மீது கடவுளுக்குரிய உரிமையை நாம் ஏற்றுக் கொள்வது நீதி சமயத்தின் முக்கிய பண்பே இறைவன்மீது நமக்குள்ள சார்பை ஏற்பதுதானே.

3. நன்றி எவ்வாறு சமயம் தேவை எனக் காட்டுகிறது?

நம்மிடமுள்ள எல்லாம் இறைவனிடமிருந்து வந்தவை; சமயம் நமது நன்றியை வெளிப்படுத்துவதேயாகும்.

4. ஒழுங்குமுறை எவ்வாறு சமயம் இன்றியமையாத தாக்குகிறது.

ஒழுங்குமுறை ஒவ்வொருவருடைய உரிமைகளையும், கடமைகளையும் மதித்து அவற்றை ஏற்பது. இந்த உரிமை களையும் கடமைகளையும் காப்பாற்றுவது சமயம், ஏனெனில் இறைவனே தலைவர். இறைவன் தந்துள்ள இந்நல்லொ ழுக்கச் சட்டதிட்டங்களை ஏற்று நடப்பதே உலகில் நீதியும் அமைதியும் வளர ஏற்றதாகும்.

---

5. இருவகை சமயம்

உலகினில் வெவ்வேறு காலத்தில் பலபல சமயங்கள் தோன்றியுள்ளன; சில மறைந்துள்ளன. ஆயினும் எல்லாச் சமயங்களையுமே இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் — இயற்கைச் சமயம், இயற்கைக்கு மேற்பட்ட சமயம்.

இயற்கைச் சமயம் எது? மனிதன் தன் அறிவின் ஒளியினால் தனக்கும் கடவுளுக்கும் இருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து தன் வணக்கத்தைத் தெரிவித்து இறைவழிபாடு செய்து தன் அறிவைப் பயன்படுத்தி அமைத்த சமயத்தை இயற்கைச் சமயம் எனக் குறிப்பிடுகிறோம்.

இறைவனின் தனி உதவியினால், ஏவுதலினால், அறிக்கையினால், நேரடி உறையாடல்களினால், அதிசய தோற்றங்களினால் உற்பவித்த சமயங்களை இயற்கைக்கு மேற்பட்ட சமயம் என்கிறோம்.

இங்குதான் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. ஏறக்குறைய எல்லாச் சமயங்களுமே இறைவன் தங்களுக்கு தனி அறிக்கை கொடுத்துள்ளதாக உரிமை கொள்கின்றன. அதே காலத்தில் பல சமயங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பற்பல முரண்பாடான கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும் அவற்றில் இருப்பதைக் காண்கிறோம். ஒரு சமயம் பல மனைவிகளைக் கொள்ளலாம் என்று உத்தரவிடுகிறது; வேறொரு சமயம் ஒரு மனைவிக்குமேல் திருமணம் செய்யக் கூடாது என்கிறது. இதுபோன்ற பல வேறுபாடுகளைக் காணும் மனிதன் ஐயத்தில் ஆழ்கிறான். நிற்க, கடவுள் மக்களோடு உரையாடுவது எங்ஙனம்? இது கூடாத செயல்; ஆகையால் சமயம் கடவுளின் தூண்டுதலால் வந்தது என்பது அனைத்தும் பொய் என்பது சிலரின் கூற்று.

இயற்கைக்கு மேற்பட்ட சமயத்திற்கு மாறாக இருப்பது கடவுள் மக்களிடம் பேசமுடியாது என்பதே. இது உண்மையா? சற்று ஆராய்வோம். அவர் ஏன் பேசக் கூடாது? மனிதன் தன் நினைவுகளையும், கருத்துகளையும் சமிக்கினையினாலும் சொல்லினாலும் எழுத்தினாலும் வெளிப்படுத்துகிறான். தொலைபேசியின் வழயாக குழுவுக் குறித் தொகுதியிலுந் தன் கருத்துகளை அறிவிக்கிறான். கொடிகளைப் பலவகையில் ஆட்டி அசைத்து தன் கருத்தை வெளிப்படுத்துகிறான். 'லூனா' என்னும் வானவெளிக் கப்பலை நிலவுக்கு அனுப்பி, அங்குள்ள நிலமையை அறிய அமைப்பின்

வழியாகக் கேட்கிறான். அற்ப அறிவுள்ள மனிதனால் கூடு மானதை அளவில்லாப் பேரறிவுள்ள கடவுளால் கூடாது என்று சொல்லுவது முறையா ?

ஆதலின் கடவுளைச் சார்ந்த வரையில் அவர் மக்களுடன் போவதற்கு, தம் அறிக்கையை வெளியிடுவதற்கு யாதொரு தடையுமில்லை. மனிதன் இத்தகைய அறிக்கையைக் கேட்பதால் தன்னையே சிறுமைப்படுத்திக் கொள்கிறான் என்று கூறலாகாது. அவன் கற்றுள்ளது கை அளவு மட்டுமே. அவன் கற்றறிய வேண்டியன விண்ணிலும் மண்ணிலும் இன்னும் பல இருக்கின்றன. இத்தனை ஆண்டுகளாக நிலவுலகு பந்துபோல் உருண்டையாயிருக்கிறது என்றனர் விஞ்ஞானிகள். இப்பொழுதுதான் அது பேரிக்காயைப் போலத் தலை சிறுத்து அடி பெருத்து இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர். நிலாவின் முதுகைக் கண்டறிய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். மருத்துவத் துறையிலும் 'கான்சர்' என்னும் பிளவை அல்லது புற்றுநோயின் காரணத்தையும் அதை முழுவதும் ஒழிப்பதற்கான மாற்றையும் இன்னும் வல்லுநர் கண்டுபிடிக்கவுல்லை. இவ்வாறிருக்க, மனிதன் தான் எல்லாத்துறையிலும் கரை கண்டுவிட்டதாகக் கர்வங் கொண்டு, கடவுளிடமிருந்து கற்றறிய ஒன்றுமில்லை என்று சொல்வது அறிவின்மையையே காட்டும். ஆகையால், கடவுள் மனிதனிடம் பேசக்கூடும்.

பல சமயங்களும், ஏன் எல்லாச் சமயங்களுமே இறைவனிடமிருந்து வந்தனவாக உரிமை கொள்கின்றமையால், நாம் எத்தகைய மனநிலையோடு அவற்றை அணுகுவது ? பொதுவில் தாம் எந்தச் சமயத்தையும் இழிவாகப் பேசலாகாது. எல்லாச் சமயங்களுக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டும். ஒரு சமயம் கடவுளிடத்தினின்று வரவில்லை. அவரது தூண்டுதலைப் பெறவில்லையென்று நன்கு தமக்குத் தெளிவாயினும், அச்சமயத்தவர் நேர்மையுடன் இருப்பதால், அவர்களுடைய கொள்கைகளை மதிக்கவேண்டும். ஒருபோதும் பிறச் சமயத்தவருடைய கோட்பாடுகளையும் சமயச் சடங்குகளையும் எள்ளி நகையாடக்கூடாது.

ஆயினும், நாம் மன நேர்மையுடன் உண்மையை உணரும் கருத்துடன் பல சமயங்களை ஆராய்ந்தறிய வேண்டும். கடவுள் உண்மையாகவே அறிந்திருப்பதை உணர்ந்தார். அந்த அறிக்கையைப் பணிவுடன் ஏற்றுக் கொள்ளும் நேர்மையுடன் ஆராயவேண்டும். நம்மைப் படைத்து நடத்துபவர் நமக்கு ஓர் அறிக்கையிட்டார் என்று உறுதியாக உணர்ந்தால், அதை ஏற்று, அதற்குப் பணியக் கடமைப்பட்டிருக்கிறோம் எனச் சொல்லாமலே விளங்கும்.

இந்த இருவகைச் சமயத்தின் மட்டிலும் – இயற்கைச் சமயம், இயற்கைக்கு மேற்பட்ட சமயம் – நம்மிடம் இருக்க வேண்டிய மனப்பான்மை என்ன ?

இயற்கைச் சமயம் மனிதனின் அறிவினால் கண்ட உண்மையின் விளைவு. கடவுள் உண்டு அவரே நம்மைப் படைத்தவர். ஆள்பவர், நடத்துபவர்! நன்கொடையாளர். நாம் அவரை வழிபட வேண்டுமென்று நமது அறிவு கூறு கிறது. எனவே, தம் படைப்புகளினின்று கடவுள் எதிர் பார்ப்பது இந்த இயற்கைச் சமயத்தின்படி வழிபடுவதாகும். 'கண்ணுக்கெட்டாத கடவுளுடைய பண்புகள் உலகம் உண்டானது தொடங்கிப் படைப்புக்களாலே அறிவுக்கு எட்டும்படியாகி, அவருடைய வல்லமையையும், தெய்வீகத் தையுங்கூட விளங்கப் பண்ணுவதால் மக்கள் போக்குச் சொல் வதற்கு இடமேயில்லை' எனக் கூறுகிறது கிறிஸ்தவர்களின் திருநூல். ஆதலின் படைப்பைக் கண்டு, அதைப் படைத் தோரை அறிந்து அவருக்கு அன்பு செலுத்தி, அவரை வழிபட வேண்டும்.

இயற்கைக்கு மேற்பட்ட சமயத்தைப்பற்றி நாம் நடந்து கொள்ளும் முறை என்ன ? சிலர் மிக எளிதாக எதையும் நம்புவார்கள். ஆராய்ச்சி மனப்பான்மை, வரலாற்று நுணுக்கம் இவையொன்றுமிராது. எந்தக் கதையையும் நம்பத் தயாராயிருப்பார்கள். இரயிலில் செல்லும்பொழுது, ஒருவன் ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி, இங்குத்தான் முந்தின வாரம் ஒரு பேரூர்தி விழுந்தது. பெரும் விபத்து நடந்தது என்பான். எப்பொழுது. எந்த ஊர்தி. அதைப்பற்றி

நாளிதழில் செய்தி ஒன்றுமில்லையே என்று மறுத்துச் சொல்வார் ஒருவருமிரார். மாறாக, உடனே அடடே, பஸ் ஒட்டிக்கு அடி ஏதுமுண்டோ? எத்தனைபேர் செத்தவர்கள்? விழக் காரணம்?" இவ்வாறு வினாக்களை அங்கிருப்பவர்கள் அடுக்குவார்கள், அவனும் கதையாகச் சொல்லிக்கொண்டே வருவான். யாராகிலும் ஒருவர், அவனை மடக்கி, 'ஐயோ, இத்தனை புள்ளி விவரம் கொடுக்கிறீரே, நீரும் அந்த இடத்தில் இருந்தீரா, என்ன? என்று கேட்கட்டும், ஹி, ஹி அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள்' என்பான்.

சமயம் சம்பந்தப்பட்ட வரையிலும் இன்னும் எளிதாக நம்புவார்கள். ஆலமரத்தடியில் ஒரு நல்ல பாம்புப் புதர் இருக்கும், ஒருவன் வளர்த்த பாம்பாகவும் இருக்கக்கூடும், உடனே பிழைக்கும் வழியைக் கையாளுவான்; சாமி இங்கே ஒரு கோயில் கேட்கிறது என்று சொல்லி, ஒரு சிறு பந்தலைப் போடுவான். வழிபாட்டுக்கு மிக முக்கியமான கட்டமாகிய உண்டியல் ஒன்றை அமைப்பான். மக்கள் கூட்டங்கூட்டமாய் வருவார்கள், உண்டியல் நிறையும்.

ஆகவே, ஒரு சிலர் எதையும் நம்புவதில்லை. இதுவும் தவறு. பெரும்பான்மையோர் எதையும் நம்புவார்கள். இதுவும் தவறு. ஆதலின், முறையான மனப்பான்மை என்ன? உண்மையை அறியும் நோக்கத்துடன் கடவுள் எந்தெந்தச் சமயத்தில் அறிக்கை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஊக்கத்துடனும் செபத்துடனும் ஆராய்ந்தறிவதாகும்.

வினா விடை

1. இயற்கைச் சமயம் எது?

மனிதன் தன் அறிவின் ஒளியினால் மட்டும் கடவுளுக்கும் தனக்குமுள்ள சார்பைக் கண்டுணர்ந்து உருவாக்கிய சமயம்.

2. இயற்கைக்கு மேற்பட்ட சமயம் எது?

இறைவனின் ஏவுதலினால், அறிக்கையினால் அமைந்த சமயம்.

3. இயற்கைச் சமயத்தின்படி நடக்க வேண்டுமா?

ஆம்; காரணம், நம் அறிவு ஆராய்ச்சியினின்று உதித்தது. மனச்சான்றின் குரலொளிக்கு இசைந்து நடக்க வேண்டும்.

4. இயற்கைக்கு மேலான சமயத்தைப்பற்றி நமது மனப் பான்மை எவ்வாறிருக்க வேண்டும்?

அதை மதிக்க வேண்டும் நேர்மையுடனும், உண்மையை அறியும் நோக்கத்துடனும் அந்தச் சமயம் கடவுளின் தூண்டு தலினாலானதா என்று ஆராய்ந்தரிய வேண்டும்.

---

6. உண்மையை நாடுதல்

கடவுள் தம்மை வழிபடுவது எவ்வாறெனவெளியிட்டுள் ளாராயின், அதை அறிவது எங்ஙனம்?

அவரே நமக்கு அறிவைக் கொடுத்தவர். அவரே தம்மை அடையும் வழியை வழிபடும் வழியைக் காட்டுபவர். ஆதலின் நமது அறிவுக்கு முரணாயுள்ள எதனையும் அவர் வெளியிட் டிருக்கமாட்டார் என்பது தெளிவு. நன்னெறிக்கு மாறான வற்றை அவர் கற்பிக்கமாட்டார். பொய், புரட்டு, பகை, முறைகேடான வாழ்வு, கொலை, காமம் ஆனவற்றைக் கடவுள் ஆதரிக்கமாட்டார். அவை சமயச் செயல்களில் இடம் பெற்றிருப்பின், அந்தச் சமயம் கடவுளிடமிருந்து வந்ததன்று என்பது உறுதி.

கடவுள் உண்மையிலேயே பேசியுள்ளார். அறிவித் துள்ளார் என்பதற்கு ஓர் அடையாளம் தேவை. அந்த அடையாளம் உறுதியானதாயிருப்பது கட்டாயம். அத்தகைய அடையாளத்தைக் கோருவதற்கு நமக்கு உரிமையுண்டு. நமது நற்செய்தியை அறிவிக்கும் இறைவன் அதற்குத் தடை செய்யமாட்டார்.

ஒருவர் ஒரு பெரும் முதலாளியிடம் நூறு ரூபாய் கைமாற்றாக வாங்குகிறார். அதற்கு ஒரு சான்று இருந்தால் நல்லது என்றார் முதலாளி. பணம் பெற்றவர் ஒரு சிறு

தாளைக் கிழித்து, பெற்றுக்கொண்ட தொகை நூறு என்று எழுதி, பெயரின் முதல் எழுத்துக்களை மட்டும் கையொப்பத் துக்காகக் குறித்துக் கொடுத்துவிட்டுச் செல்கிறார். அந்தச் சீட்டுக்கு ஏதாகிலும் மதிப்பு உண்டா? ஊருமில்லை பெயரு மில்லை, நாளுமில்லை அதில். அதைக்கொண்டு பணம் வாங்கினவர் திரும்பத் தொகையைத் தராவிடில் அவர்மீது வழக்குத் தொடரக்கூடுமா? அவ்வாறு ஒருவன், நான் நன்றாகத் தூங்கினேன்; சாமி எனக்குத் தோன்றிற்று; என்னுடன் பேசிற்று; இவ்வாறு வழிபாடு வைக்கக் கேட்டுக் கொண்டது என்று கூறினால், அதை நாம் நம்பவேண்டுமா? அது ஒரு சான்றாகுமா? அதிலும் அசைக்கக் கூடாச் சான்றாகுமா?

ஆகையால், கடவுளிடம் நாம் விரும்பும் அடையாளத்தின் பண்புகளாவன:

1. அந்த அடையாளம் புலனால் அறியக்கூடியதா யிருத்தல் வேண்டும்.

2. மனிதனின் ஆற்றலுக்கு மேற்பட்டதும் இறைவனால் மட்டும் ஆற்றக்கூடியதுமாயிருத்தல் வேண்டும்.

3. அது இறைவனின் வெளியீட்டுடன் சம்பந்தப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

1. காணக்கூடிய அடையாளமானதாயிருக்க வேண்டும். ஏனெனில்: அது புலனுக்குத் தோன்றாவிடின், ஒவ்வொரு வனும் தான் தனது உள்ளத்தில் இறைவனைக் கண்ட தாகவும், அவரது குரலொலியைக் கேட்டதாகவும் பிதற்றலாம். பிறரை ஏமாற்றலாம். அது அடையாளம் என்னும் சொல் லுக்கே பொருத்தமற்றதாகிறது. கடன் வாங்கினதற்கு ஓர் உறுதிபத்திரம் என்று வைத்துக்கொள்வோம். தொகை குறிப்பிட்டிருக்கிறதா? பில்லை ஒட்டியிருக்கிறதா? கையொப்ப முண்டா? சான்றாய்க் கையொப்பமிட்டவர்கள் யார்? இவற்றை நாம் ஆராயலாம்; மெய்யான உறுதிப் பத்திரமா இல்லையா எனத் தீர்மானிக்கலாம். ஆதலின் கடவுள் கொடுக்கும் அடையாளம் காணக் கூடியதாயிருக்க வேண்டும்.

2. மனிதன் ஆற்றலுக்கு மேற்பட்டதாயிருக்க வேண்டும். அவ்வாறின்றி, மனிதனே செய்யக்கூடிய ஒன்றை அடையாளமாக ஏற்றதால், அது மனிதனிடத்தினின்று வந்ததா இறைவனிடமிருந்து வந்ததா என்ற ஐயத்துக்கு இடமாகும். மேலும், மனிதனின் ஆற்றலுக்கு ஓர் அடையாள மாயின், பலர் பிழைக்கும் வழியை நாடுவர்; மக்களை ஏமாற்றுவர்.

3. அடையாளம் கடவுளின் வெளியீட்டுடன் பொருந்தியதாக இருக்க வேண்டும். தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை மரத்தில் நெறி கட்டினதுபோல எத்தகைய தொடர்பில்லாததை ஓர் அடையாளமாகக் கருதுவது எங்ஙனம்? இராமேஸ்வரத்தில் கடல் கொந்தளிக்கக் காசியிலுள்ள பெரியார் ஒருவர் ஆண்டவன் என்னை மாநில அமைச்சராகத் தேர்ந்துகொள்ளாததன் தண்டனை அது என்றால், இவ்விரண்டுக்கும் தொடர்புண்டா? கடவுளிடமிருந்து வரும் சமய உண்மை என்பதற்கு, அந்த வெளியீட்டைத் தொடர்ந்து மனிதனால் கூடாத ஓர் அதிசய நிகழ்ச்சி நிகழ்ந்திருப்பின் அதை அடையாளமாக ஏற்றுக் கொள்ளலாம்.

சுருங்கக் கூறின்

ஒரு சமய உண்மை அல்லது ஒரு சமயம் கடவுளிடமிருந்து வந்தது. அவரால் அறிவிக்கப்பட்டது என்று மெய்ப்பிப்பதற்கு.

1. அந்த உண்மை மனிதன் அறிவுக்கு முரணாயிருக்கலாகாது.

2. அது மனிதனை இறைவன்பால் இட்டுச் செல்ல வேண்டும். நற்செயல்களைச் செய்ய அவனைத் தூண்ட வேண்டும்.

3. மனிதனின் கதி, மறுமை, புனிதத்தன்மையுடையது எங்ஙனம், பிறருக்குப் பணியாற்றுவது எத்துணை உயரிய சேவை என்பனவற்றைத் தெளிவுபடுத்துவதுடன், மனிதனை

மேம்பாடுள்ளவனாகச் செய்து, அவனை இறையன்பிலும் பிறரன்பிலும் வளரச்செய்யும். உண்மை அல்லது சமயம் கட்டாயமாக கடவுளிடமிருந்து வந்தது என்பது உறுதி.

4. அந்த உண்மைக்கு அல்லது சமயத்துக்குச் சான்றாக எல்லோரும் புலனால் அறியக்கூடிய, எல்லாப் படைப்புகளின் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட, அந்த உண்மை அல்லது சமயத்துடன் சம்பந்தப்பட்ட ஓர் அடையாளம் இருக்கவேண்டும்.

உண்மையைக் கண்டடைய நம்மிடமிருக்கவேண்டியது என்ன? அதற்கேற்ற பக்குவம், எதற்கும் தேவையான பக்குவம், தன்மை, அறிவு, பயிற்சி இன்றியமையாதவை. வீட்டில் தாய் இட்லி அவிக்கிறாள். தகுந்த பக்குவமாக மாவரைத்து, ஏற்றளவு உளுந்தைப் போட்டுப் பிணைந்து வைத்து, மறுநாள் பஞ்சுபோன்ற மெதுவான இட்லியை அவித்து அடுக்குகின்றாள். பையனும் மகிழ்வுடன் வயிறார உண்கின்றான். ஒரு நாள் தாய் உடல் நலமில்லாமையினால் செய்யக்கூடவில்லை. முழுப் பொறுப்பைப் பையனின் தங்கை ஏற்றுத் தயாரிக்கின்றாள். காலையில் இட்லியை அவித்து அடுக்குகிறாள். அவை எந்தக் கட்டடத்தையும் தகர்க்கக் கூடிய இரும்பு குண்டு போலிருக்கின்றன. ஏன்? அவள் இட்லிக்குத் தக்க பக்குவத்துடன் மாவை அரைக்கவுமில்லை, தக்க பக்குவத்துடன் அவிக்கவுமில்லை.

உண்மை நிகழ்ச்சியெனக் கூறப்படுகிறது. நம் நாட்டில் குடியரசுக்கு முன் சில பகுதிகளில் சிற்றரசர்கள் இருந்தார்களல்லவா? அவர்களில் ஒருவர் தன் செயலாளருடன் வண்டியில் வெளியே சென்றுவரப் புறப்பட்டார். சிறிது காலத்திற்குப்பின் பல பையன்கன் பந்து விளையாடிக்கொண்டிருந்தனர். இதைக் கண்ட அந்த அரசர் அவர்கள்மீது இரக்கங்கொண்டார். அத்தனைபேரும் ஒரு பந்துக்காக வன்றோ சண்டைபோட்டுக்கொள்கிறார்கள் என எண்ணினார். உடனே தன் செயலாளரை அழைத்து அந்தப் பையன்களுக்கு ஆளுக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். என்னே அவரது வள்ளன்மை! ஆனால், என்னே பந்து விளையாட்டைப் பற்றிய அவரது அறியாமை!

ஆதலின், உண்மையைக் கண்டுணர விரும்புவோரும் அதற்குரியவாறு தங்களையே பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

1. உண்மையை நாடுபவனுக்குத் தாழ்ச்சி முக்கியம். இறைவன்முன் தான் வறியன்; மிகச் சிறியவன் என்பதை ஏற்றுக்கொள்வதே தாழ்ச்சியாகும். தான் அறிந்தது சிலவே, இன்னும் அறியாதது பல உள்ளன என்று விரிந்த உள்ளத்துடன் இருக்கவேண்டும். அகங்காரியை மக்களே வெருக்கும்போது இறைவன் அவர்களை ஆதரிப்பாரா ? அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவாரா ?

2. வேண்டல் கடவுள் நம் பேராசிரியர், அவர் நமக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அவரைக் கெஞ்சுகிறோம்.

3. ஆராய்ச்சி, சமயம் மிக முக்கியமானது என்பதால் அதைப்பற்றி அறிய மிக்க அக்கறை கொள்ளவேண்டும். முயற்சியும் ஆராய்ச்சியுமின்றி, எடுத்ததற்கெல்லாம் எங்கள் பாட்டன் பூட்டன், பாட்டி பூட்டி அனைவரும் இவ்வாறு அவ்வாறுதான் செய்தார்கள் என்று அதையே விடாப்பிடியாகக் கொண்டிருப்பது அறிவின்மையேயாகும். ஆகவே; சமய நூல்களை அறிந்துணர முன்வரவேண்டும்.

4. நல்வாழ்வு. இறைவனுக்கு விருப்பமான மனச்சான்றுக்கேற்ற தூயவாழ்வு வாழ்ந்தால், அவர் நம்மை நமக்கு வெளிப்படுத்துவார். நாம் உண்மையைக் கண்டுணர அருள்பொழியார். நமது வாழ்க்கை முறைகேடாயிருப்பின், அவரது திருவுளத்தை நிறைவேற்றாவிடின், அவர் நமக்குத் துணை செய்வாரா ?

வினா விடை

1. கடவுள் வெளியிட்டாரென்பதை அறிவது எங்ஙனம் ?

புலனால் அறியக்கூடிய, மனிதனின் ஆற்றலுக்கு மேற்பட்ட வெளியிடப்படும் நற்செய்தியுடன் சம்பந்தப்பட்ட ஓர் அறிய அடையாளத்திலிருந்து கடவுள் வெளிப்பட்டுள்ளாரென அறியலாம்.

2. உண்மையறிவதற்கு நம்மிடமிருக்க வேண்டிய பக்குவம் யாது ?

தாழ்ச்சி, செபம், ஆராய்ச்சி, நல்வாழ்வு இவற்றை நாம் மேற்கொண்டால், நாம் உண்மையை அறிய இறைவன் உதவுவார் ?

---

7. சமய வழிபாடு

ஒரு மாணாக்கன் மிக அறிஞன். புத்தகத்திலுள்ள அனைத்தையும் அப்படியே கரைத்துக் குடித்துவிடும் திறமையுள்ளவன். வகுப்பில் ஆசிரியர் யாரைக் கேள்வி கேட்டாலும் இவன் தன் இடத்தில் இருப்புக் கொள்ளாது விடை தரத் துடிப்பான், சரியான விடையும் கொடுப்பான். ஒரு நாள் அவன் வீட்டில் சாமி பீடத்தை அலங்காரம் செய்தான். பீடத்தைச் சுற்றி மின் விளக்கு வைத்துப் பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்க விழைந்தான். இருட்டியபின் அவன் தன் கைவரிசையைக் காட்டினான். பெற்றோர் வியப்பில் ஆழ்ந்தனர். காரணம் வீடு ஒரே இருட்டாயிற்று. மின் வலியினால் இணைப்பில் உருகுகம்பி எரிந்துவிட்டது, இன்னது செய்வதெனத் தெரியாது தீபாவளிக்கு வந்த திருட்டுக் கிடாவைப்போல விழித்தான். நுணுக்கமறிந்த அயலார் அங்கு வந்து செம்மைப் படுத்திச் சென்றார்.

பையன் அறிவு ஏட்டு அறிவாக மட்டுமிருந்தது. அதைச் செயலறிவில் பயன்படுத்தவில்லை. ஏட்டுச் சுரைக்காய் சமையலுக்காகாது என்ற முதுமொழி உண்மையென்று அவன் உறுதிப்படுத்தினான்.

அவ்வாறே, சிலர் சமய உண்மைகளைத் தெளிவாகக் கூறுவார்கள். அனைத்தையும் அறிந்திருப்பார்கள். அவர்களது சமயப்பற்று அத்துடன் நின்றுவிடும், அது போதாது. அவர்கள் நடைமுறையில் சமயப் பற்றுடன் வாழவேண்டும்.

இறைவழிபாடு ஒரு புண்ணிய முயற்சி. கடவுளே எல்லாப் படைப்புகளுக்கும் கர்த்தர் என்பதை ஏற்று அவருக்கு வணக்கம் புரிய அது நம்மைத் தூண்டுகிறது.

சமய வழிபாட்டுச் செயல்களின் அடிப்படை கடவுள் மக்களுக்குமேல் அளவில்லா வகையில் உயர்ந்தவர் என்பதே யாகும், அவர் எத்துணை நல்லவர், அன்புள்ளவர், வல்லவர் உயர்ந்தவர் என்றால் அவற்றை நாம் ஏற்காது வாழமுடியாது மறுக்கவும் முடியாது. அவற்றை ஏற்றுக்கொள்வதால், அவர் முன் தெண்டனிடுகிறோம்; தலை வணங்குகிறோம். நமது சிறுமையையும் தாழ்வையும் ஒத்துக்கொள்கிறோம். மக்களோடு ஒப்பிடும்பொழுது நாம் மிக உயர்ந்தவராயிருக்கக்கூடும்; இறைவனுக்கு முன்னே நாம் யார்? ஒன்றுமில்லை.

காவலாளர் காவல்துறை வட்டார அதிகாரியைக் கண்ட வுடன் மரியாதை தெரிவிக்கிறார். நமது கலப்பட மொழியில் சல்யூட் அடிக்கிறார். ஆனால் அந்த அதிகாரி அமைச்சரைக் கண்டதும் எத்துணை நிமிர்ந்து நின்று சல்யூட் அடிக்கிறார். என்பதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? ஏன் அமைச்சர் அந்த அதிகாரிக்கும் மேற்பட்டவர். ஆனால் இருவரும் மனிதர்தானே. அவ்வாறாயின், கடவுளுக்கு முன் நமது தன்மை என்ன? அவர் தாமாயிருக்கிறார்; நாம் பிறரைச் சார்ந்திருக்கிறோம். அவரது ஒரு சொல் ஆயிரமாயிரம் உலகங்களை உண்டாக்கவல்லது; நமது ஆயிரம் சொல் ஒன்றையும் உண்டாக்க வலிமையற்றது. இந்த நமது சிறுமையே அவரை வணங்கச் செய்கிறது.

தொழுவது என்பதும் வணங்குவதே. வணங்குவது என்றால் தலையாட்டுவது, தெண்டனிடுவது, மாலை சூடுவது, சூடம் கொளுத்துவது என்று மட்டும் எண்ணலாகாது. நாம் அவருக்குப் பணிந்து, அவரது திருவுளப்படி நடக்க முயலுவதும், அவரது ஊழியத்தில் தம்மைக் கையளிப்பதுமே இந்த வழிபாடு, வணக்கம், தொழுதல் என்பது.

இவ்வாறு கடவுளின் பக்தனாய் வாழ்வதற்கு மிக இன்றி யமையாத இயல்பு, நாம் நமது மனச்சான்றில் அவர் எழுதி

யுள்ள சட்டத்தின்படி நன்மையைச் செய்ய வேண்டும்; தீமையை அகற்ற வேண்டும்; மனச்சான்றின் குரலுக்கு எப்பொழுதும் செவிசாய்க்க வேண்டும். இந்த அளவிலென்கிலும் நாம் அனைவரும் கடவுளது திருவுளத்தை ஏற்று அவருக்குத் தொண்டாற்ற வேண்டும்.

இந்தப் பக்தி நமது உள்ளத்தில் செயல்பட வேண்டும். கடவுள் நம் கர்த்தன், நாம் அவரைச் சார்ந்துள்ள அடியார் என்று உள்ளத்தில் பதிந்துள்ள இது, தானாகப் புறச்செயல்களில் மலர்ந்து தோன்றும். நமது அன்றாட ஒவ்வொரு செயலிலும், அது எத்துணை அற்பமாயினும், அவரே நம் எல்லாம்; நாம் அவருடைய அடியார் என்ற முத்திரை பதிந்திருக்கும், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நுணுக்கத்திலும் இறைவனுக்கு அமைந்து, அவரது விருப்பம்போல் நடப்போம் இதுவே மெய்யான இறைவழிபாடு.

இறைப் பற்றை உள்ளத்தில் கொண்டு, அவரை உள்ளத்தில் மட்டும் வழிபடுவது போதாதா? பயிர் என்று நன்கு உச்சரித்த பையன், உயர் படிப்பிற்குப் பின் 'பசிர்' என்றதுபோல், இன்று சிலர் கடவுளை என் உள்ளத்தில் போற்றுகிறேன், வணங்குகிறேன். நான் கோயில் செல்லத் தேவையில்லை. கைகூப்பத் தேவையில்லை. தலை வணங்கத் தேவையில்லை என்று கூறுகின்றனர். இன்றைய உயர் நாகரிகம் அது!

மனிதன் அசரீரியல்லன். உடலும், உள்ளமும் கொண்டவன். ஆதலின், அவனுடைய புறச் செயல்களினின்றே அவனது உள்ளத்தைப் புரிந்துகொள்ளக் கூடும். அப்புறச் செயல்களே உள்ளத்தின் வெளி அடையாளமாக அமைந்திருக்கிறன. மாணாக்கன் ஆசிரியரைத் தன் உள்ளப் பீடத்தில் போற்றிப் புகழுகின்றான். அவர் வகுப்பினுள் நுழையும்பொழுது கால்களைச் சாய்வுப் பலகையில் போட்டுக்கொண்டு இருக்கிறானென்று வைத்துக்கொள்வோம் அந்த மாணாக்கனுக்கு என்ன கிடைக்கும் என்று நமக்குத் தெரியுமன்றோ? அவன் தன் உள்ளத்தில் உயரிய இடத்தை

அவருக்குக் கொடுத்துள்ளதாகச் சமாதானம் கூறின் அது முறையாகுமா ? நாம் நம்முடைய எண்ணங்களையும் ஆவல் களையும் சொல்லினாலும் செயலினாலும் உடலின் அசைவு களினாலும் காட்டுகின்றோம். தாயானவள் மகனுக்குச் சோறு பரிமாறும்பொழுது, அவன் பிடித்துவைத்த பிள்ளையாரைப் போல் அசையாமலிருந்தால், அவள் என்ன செய்கிறாள் ? 'போதுமா ?' என வினவுகிறாள். அப்பொழுதும் அவன் நிலையாய் இருப்பின், என்ன செய்வது ? அவனது உள்ளம் அவளுக்கு எவ்வாறு தெரியும் ? எனவே, கடவுளை நமது உள்ளத்தினால் வழிபடுவது மட்டும் போதாது; தமது உடலும் சேர்ந்து வழிபட வேண்டும், ஆதலால்தான், எச்சமய வழிபாட்டிலும் மண்டிபோடல், தெண்டனிடல், தோப்புக் கொண்டம் போடல், சுற்றி வருதல், தேங்காய் உடைத்தல், கைதூக்கி வேண்டுதல் போன்ற பலப்பல வழிபாட்டுச் செயல் களைக் காண்கின்றோம்.

பலி பூசை அல்லது பூஜை — இதுவே எக்காலத்திலும் வழிபாட்டு வெளிச் செயலில் மிக முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. பலி ஆவதென்ன ? கடவுளே நமது கர்த்தரும் கதியும் என்று உள்ளத்தில் ஏற்றுக்கொண்டதை வெளி அடையாளத்தினால் காட்டும் ஒரு படையல்; ஒரு நன்கொடை

இக்கால மரபு. ஆண்டு பிறந்த நாளில் ஓர் எலுமிச்சைப் பழத்தை எடுத்துச் சென்று பெரியோரைக் காண்கிறோம். பசையுள்ளவர்கள் பலவகைப் பழங்களையும் வாங்கிச் செல் கின்றனர். இத்தகைய நன்கொடையானது கொடுப்போரின் உள்ளத்திலுள்ள அன்பு, பணிவு, மரியாதை ஆகியவற்றின் ஓர் அடையாளமாகும். ஓர் எலுமிச்சை பழமாயினும் ஒரு கூடைச் சாத்துக்குடியாயினும் உள்ளத்தில் அன்பு இல்லை யென்றால், கொடை என்னும் பெயருக்கே பொருத்தமற்ற தாகின்றன. அவை வெறும் பழங்களேயாகும்.

பணியாளன் ஒருவன் தன் தலைவனுக்கு எதிராக மொட்டைக் கடிதம் போட்டு, அவரது பிழைப்புக்கே வெடி வைக்க முயலுகிறான். இது அவருக்குத் தெரிந்துவிட்டது.

அந்த ஊழியன் ஒன்றுமறியாதவன் போல் தட்டில் பழங்களை எடுத்துக்கொண்டு அவரைக் கண்டுகொள்ள வந்தால், அவர் அவற்றை ஏற்றுக்கொள்வாரா? அவனது நன்கொடை அன்பின் காணிக்கையென்று கொடுக்கப்படுகிறது; அவனது உள்ளத்திலோ நஞ்சு உறைந்திருக்கிறது; இத்தகைய நன்கொடை ஒரு நன்கொடையெனக் கருதப்படுமா? ஆதலின் நமது அன்பளிப்பு உள்ளத்தின் அன்பின் அடையாளமாயிருப்பது இன்றியமையாதது.

நாம் கடவுளுக்குப் பலியிடும்பொழுது, படைக்கும் பொழுது, இந்த வெளி அன்பளிப்பினால், நாம் அவரது பொருள். நம்மீது அவருக்கு எல்லாவகை உரிமையுண்டு; அவரே நமது அன்புக்குரியவர்; இம்மைக்குப் பின் அவரை அடையவே ஏங்கி நிற்கிறோமென்று வெளிப்படுத்துகிறோம். அவரது திருவுளப்படி நடக்கத் தயாராயிருப்பதாக உறுதி கொள்கிறோம். ஆதலின், பலி அல்லது பூசை எத்துணை உயரிய அன்பின் அடையாளம்! கையளிப்பின் அடையாளம்! காணிக்கையின் அடையாளம்! நிவேதனத்தின் அடையானம்!

இப்பலியின் நோக்கமென்ன?

ஓர் எடுத்துக்காட்டு, நமது சிற்றூருக்கு மாநில அமைச்சர் ஒருவர் வந்துள்ளார். நம் மக்கள் என்ன செய்கின்றார்கள்? அவருக்கு மாலை சூடி. அவரைக் கனப்படுத்தி, அவர் தம் அமைச்சர் என்று வெளிப்படுத்துகின்றார்கள்.

அவர் நம்மூருக்கு ஊர்தி வசதிகளையும், இன்னும்பல நாகரிக வசதிகளையும் செய்துள்ளார். ஆதலின், இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவருக்கு நன்றி கூறுகிறார்கள்.

நம் சிற்றூருக்கு இன்னும் சில தேவைகள் உள அவற்றையும் எடுத்துக் கூறுகின்றார்கள். விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றார்கள்.

நம் ஊர் மக்கள் பாதுகாப்பு நிதிக்காகப் பெருந்தொகை கொடுக்கவில்லையென்று அவர் வருத்தம் தெரிவித்ததாக கேள்வியுற்றார்கள். அதற்காகவும் தங்கள் வருத்தத்தை,

வெளிப்படுத்தி, நல்ல விளைச்சல் கிடைத்தால் மிகுதியாகக் கொடுப்பதாக உறுதிமொழி கொடுக்கின்றார்கள்.

எனவே, அமைச்சரைக் கனப்படுத்துகிறார்கள் ; நன்றி கூறுகிறார்கள் ; மன்றாடுகிறார்கள் ; மன்னிப்புக் கேட்கின்றார்கள்.

பலியின் நோக்கமும் இந்த நான்கேயாகும். அவற்றில் தலையானது வணக்கம். ஆதலால், நாம் சாமிக்குப் பலியிடும் பொழுது, நமது முக்கிய நோக்கம் அவர் நம் இறைவன் என்று ஏற்று வணங்குவதாயிருத்தல் வேண்டும். அத்துடன், பெற்ற நலன்களுக்கு நன்றி கூறலாம் ; தேவையானவற்றைக் கேட்கலாம் ; செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கோரலாம்.

வினா விடை

1. நாம் கடவுளுக்கு மரியாதை செலுத்துவது எங்ஙனம் ?

நாம் அவரை வணங்கி, அவருக்கு ஊழியம் செய்யும்போது செய்யவேண்டிய மரியாதையைச் செய்கிறோம்.

2. அவருக்குச் சிறந்த ஊழியம் செய்வது எவ்வாறு ?

அவரது திருவுளப்படி நடக்கும்போது, அதாவது மனச்சான்றின் குரலொலிக்கு இசைந்து நன்மையைச்செய்து தீமையை அகற்றும்போது சிறந்த முறையில் ஊழியம் செய்கிறோம்.

3. வெளிச் செயல்களினால் கடவுளை வழிபட வேண்டுமா ?

ஆம், ஏனெனில் ; மனிதன் உடலும் உள்ளமும் கொண்டவன். வெளிச் செயல்களே அவனது உள்ளத்தை வெளிப்படுத்துவன, இறைவன் நமது உடலுக்கும் கர்த்தர்.

4. பலியென்றால் என்ன ?

கடவுள் நம்மைப் படைத்தோரும் நம் கதியுமென்று ஏற்றுக்கொள்வதன் வெளிப்படையான காணிக்கை.

5. ஏன் பலியிட வேண்டும் ?

அவர் கர்த்தர் என்பதற்காகவும், நாம் பெற்ற நலன்களுக்கு நன்றியாகவும், தேவைகளை விண்ணப்பித்தும் செய்த குற்றங்களுக்கு மன்னிப்பைக் கேட்டும் பலியிடுகிறோம்.

8. வேண்டிக்கொள்ளுதல்

சமய வழிபாட்டின் அடிப்படை இறைவன் நம் கர்த்தன் என்பதையும், நாம் அவரை எத்துணைச் சார்ந்துள்ளோ மெனில், அவரின்றி நாம் அணுவையும் அசைக்க இயலாதவர் களென்பதையும் ஏற்றுக்கொள்வது என்று பார்த்தோம். வேண்டிக்கொள்ளும் ஒருவன் இந்தப் பேருண்மையை நடைமுறையில் செயல்படுத்துகிறான்,

வேண்டிக்கொள்வது அதாவது செபம் என்றால் என்ன? இறைவனைத் தொழவும் அவருக்கு நன்றி கூறவும், தேவை யானவற்றை அவரிடம் கேட்கவும், செய்த குற்றங்களுக்கு மன்னிப்புக் கோரவும் நமது உள்ளத்தை அவர்பால் எழுப்பு வதேயாகும். இவ்வாறு அவரைப் புகழ்ந்து, அவருக்கு நன்றி கூறி வேண்டுவதன் உள் கருத்து என்ன? அவர் நமக்கு மேற்பட்டவர்; மிக உயர்ந்தவர்; மிக வல்லவர்; மிக நல்லவர் என்று நாம் ஏற்றுக்கொள்வதே. மேலும், செய்த மறச் செயல் களுக்கும் குற்றங்களுக்கும் அவரிடம் பொறுத்தல் கேட்கும் பொழுது, அவர் மிகத் தூய்மைமிக்கவர் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். இதனால்தான், செபம் இயல்பாகவே சமயச் செயலாக எக்காலமும் விளங்கி வந்துள்ளது.

ஊர்தியில் பயணம் செய்தவர் இன்பத்தின்மீது தனக் குள்ள கருத்தை வெளிப்படையாகக் கூறி, சாமியாவது. பூதமாவது, என்று பெருமையுடன் தமது முடிவைத் தெரிவித் தார். 'கிரீச்' என்ற பேரொலி எழும்பியது. ஊர்தி ஒரு குலுக்குகுலுங்கி நின்றது. உள்ளிருந்தவர் ஒருவர்மீதொருவர் சாய்ந்தனர்- இந்த ஒலிக்கெல்லாம் மேலாக 'முருகா, முருகா! அப்பனே முருகா!' என்று கூவினார். 'சாமியாவது பூத மாவது' என்ற பெரியார் நம்மக்களில் பெரும்பாலோர் அவ்வாறு தான். விபத்து வந்தால் கடவுள் வேண்டும். இடி அருகில் விழுந்தால் இறைவனை அழைப்பார்கள். ஊரிலே கொள்ளை நோயென்றால் கடவுளுக்கு வேண்டுதல் செய்வார்கள். மற்றப்

படி கடவுளை நினைக்கமாட்டார்கள். இவ்வாறு காரியமாகும் வரை காலைப்பிடி என்ற கூற்றின்படி நடப்பது மக்களுக்கு அழகா? இது முறையா?

நமது தாயகத்தில் வேண்டுதல், பிரார்த்தனை என்றாலே எல்லாச் சமயத்தவரும் தங்களுக்குத் தேவையானவற்றையும் விருப்பமானவற்றையும் கடவுளிடம் கேட்பது என்றே இருக்கிறார்கள். மாணாக்கன் தேர்வுக்குமுன் ஆண்டவனை நினைப்பான்; வேண்டுவான்; பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பான். வீட்டில் கணவனோ, பிள்ளைகளோ கடும் நோய்வாய்ப்பட்டிருப்பின், பெண்டிர் ஆலயம் சென்று வலம் வருவார்கள், வேண்டுவார்கள். எப்பொழுதுமே வேண்டுதல் வேண்டும். ஒருசிலர் தாங்கள் பெற்ற நலன்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறுவார்கள். குடும்பத்தில் எல்லாரும் உடல் நலத்துடன் இருக்கிறார்களே எந்தத் தாயாகிலும், மனைவியாகிலும் இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதுண்டா? நமக்கு அரைவயிற்றுக் கஞ்சியென்கிலும் அளித்து அவர் நம்மையும் நம் குடும்பத்தையும் காத்து வருகிறாரே. அவருக்கு நன்றி கூறுவது நமது கடமையன்றோ!

ஆதலின், ஆபத்துக் காலத்திலும், விபத்துக் காலத்திலும் நமக்குத் தேவையுள்ளபோது மட்டும் கடவுளை வேண்டாது, நாள்தோறும் செபம் செய்யும் நல்ல மரபை மேற்கொள்ள வேண்டும். அவரைப் புகழ வேண்டும்; மேன்மைப்படுத்த வேண்டும். அத்துடன் அவர் அன்றாடம் நமக்கும் நம் குடும்பங்களுக்கும் நம் நாட்டுக்கும் செய்துவரும் நலன்களுக்காக நன்றிகூற வேண்டும். பிள்ளைக்குரிய அன்புடனும் நம்பிக்கையுடனும், நம்முடைய தனித் தேவைகளையும், நாட்டின் தேவைகளையும் எடுத்துச் சொல்லி மன்றாட வேண்டும். நம்முடைய பாவங்களுக்காகவும், பிறருக்கு இழைத்த பொல்லாப்புகளுக்காகவும் வருந்தி அவரிடம் பொறுத்தல் கோரவேண்டும், இதுவே செபம்! இதுவே வேண்டிக்கொள்வது!

காலைப் பிரார்த்தனை

எல்லாம் வல்ல எம் தந்தையே !
நானும் எனக்குரிய யாவும் உமக்கே சொந்தம் !
இதோ, என்னை முழுவதும் உமக்குக் கையளிக்கிறேன்.
என் சொல், செயல், நினைவு அனைத்தும் உமது
பெருமைக்கே !
அப்பனே, உமது அன்பையும் அருளையும் தாரும்;
இன்று என்னை உமது அரவணைப்பில் காரும்.

நான் உம்மை மிகுதியாக அறிய வேண்டும்;
நான் உம்மை பற்றுடன் அன்பு செய்யவேண்டும்,
நான் உமது விருப்பப்படி உம்மை வழிபடவேண்டும்.

இறைவா !
எனக்கு இன்று வாழ்வருளும்,
என் குடும்பத்தாருக்கு ஆசியருளும் !
என் பெற்றோருக்கு நலமருளும் !
என் நாட்டுக்கு வளமருளும் !
என் உழைப்புக்கு ஊதியமருளும் !

வினா விடை

1. செபமென்றால் என்ன ?

கடவுளைப் புகழவும், அவருக்கு நன்றி கூறவும், அவரிடமிருந்து நலன்களைக் கேட்கவும், பாவமன்னிப்புக் கோரவும் உள்ளத்தை இறைவன்பால் உயர்த்துவதே செபமாகும்.

2. எவ்வாறு செபிக்கவேண்டும்.

பிள்ளைக்குரிய நம்பிக்கையுடனும் அன்புடனும், இறைவன் முன் இருக்கிறோமென்று மரியாதையுடனும் செபிக்கவேண்டும்.

---

9. தீவினை

வினை என்றால் செயல், தீவினை என்றால் தீச் செயல். மறச்செயல், பாவம், உலகினிலே பாவம் மலிந்து கிடக்கிறது. இதை மெய்ப்பிக்கத் தனி ஆராய்ச்சி தேவையில்லை. கள்ள வணிகத்தில் கொள்ளை ஊதியம் பெறுகிறார்கள். பெரிய 'நோட்டை' நீட்டினால் காலியில்லாவிடத்திலும் வேலை காலி விழுகிறது. பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கவேண்டு மாயின், போடவேண்டிய அத்தனை பேருக்கும் 'மொய்' போட வேண்டியிருக்கிறது. பணம் படைத்தோர் நன்றாய்ப் படிக் காமலே சில பள்ளிகளில் இறுதித் தேர்வில் தேர்ச்சி அடை கின்றனர், எளிய குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் பால் மாவு உணவு விடுதிகளுக்கு விற்கப்படுகிறது. எனவே, ஏமாற்றுவதும் கள்ளத்தனம் செய்வதும், கள்ள நட்புக் கொள்வதும், பொய் சொல்லி வீட்டில் பணம் பெறுவதும், கடமையைச் செவ்வனே செய்யாததும் — இது போன்றன வற்றையே ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் காண்கிறோம்.

நாம் எவ்வாறு ? என்றுமே தீவினை அகற்றி, நல்வினை யில் ஈடுபட்டு வந்துள்ளோமா ? நேர்மையுடன் மனச் சான்றைத் தட்டிக் கேட்டால், நம் குற்றவாளிகள் என்பதைத் தலைகுனிவுடன் ஏற்றுக் கொள்வோம். பலர் யாருமறியா வண்ணம் தவறி நடக்கின்றனர். சிலர் பிறர் அறியும் வண்ணம் தவறி நடக்கின்றனர். ஆனால், எல்லாம் அறியும் இறைவன் திருமுன் இருபாலரும் குற்றவாளிகளேயாவர்.

தீவினை என்பது தீச்செயல் என்றமையால் அது புலனுக்குத் தோன்றக்கூடிய மறச் செயலாயிருக்க வேண்டு மென்று நினைக்கலாகாது. எவரும் அறியாவண்ணம் என் நினைவினாலேயே விலக்கப்பட்டனவற்றை நினைத்து இன் புறக்கூடும். பிறனுக்கு எவ்வாறு பொல்லாப்பு இழைக்கலா மென்று, உள்ளத்தில் சூழ்ச்சி செய்யக்கூடும். ஆதலின், மனச் சான்றின் குரலொலிக்கு மாறாகச் செய்யும். நினைக்கும், விரும்பும் அனைத்தும் இறைவனுக்கு எதிரானவை, பாவம்

என்பது கடவுளின் சட்டத்தை முழுமனத்துடன் மீறுவதாகும்; கடவுளை நிந்தித்து எதிர்ப்பதாகும்.

கடவுளின் சட்டத்தை மீறும் இம்மனிதன் யார்? அவரை நிந்திக்கும் இவன் யார்? இவனது தன்மை என்ன? இவனது வலிமை என்ன? எல்லாம் வல்ல, தாமாக என்றும் இருந்த, இருக்கும் இறைவனுக்கு முன் இவன் யார்? எத்துணை அற்பன்! ஓர் இடி அவன்மீது விழுந்தால், கருகிச் சாம்பலாகக் கூடியவன், இவன் பாவத்தினால் அவரை நிந்திப்பதென்றால், அது எத்துணை முட்டாள்தனம். நாம் பாவம் செய்த ஒவ்வொரு முறையும் அவரை எதிர்த்தோம்; அவரன்றி நாமாக வாழக்கூடியவர்போல் நடந்தோம்.

தீவினையின் இழிவுத் தன்மையைச் சற்று ஆழ்ந்து ஆராய்வோம். எச்சமயத்தவரும் கடவுளை அன்பொழுகும் தந்தை என்னும் சொல்லினாலே அழைக்கின்றனர். கிறிஸ்தவ சமயத்தவர் பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! என்கின்றனர். பிறர் அப்பனே முருகா! என்கின்றனர். இறைவன் உண்மையில் மக்களாகிய நம்மைத் தந்தைக்குரிய அன்புடன் நேசிக்கின்றார். நமது நலனை நாடுகின்றார். நல்ல தந்தையைப்போல ஒரு நாள் அடிக்கின்றார்: மறுநாள் அணைக்கின்றார். துன்பத்தின் வழியாக நம்மை அழமூட்டு கிறார். இன்பத்தின் வழியாக அருளினைப் பொழிகிறார். இந்த அன்புத் தந்தையைத் தீவினையினால் நிந்திப்பது, அவரது மென்மை உள்ளத்தைப் புண்படுத்துவது, எத்துணைக் கொடுமை! நாம் பாவத்தினால் எத்துணை இழிவு மக்களாக நடக்கின்றோம்.

பாவத்தைக் கட்டிக்கொள்கிறவன் உள்ளத்தில் ஒரு தேர்வு நடக்கிறது. கடவுளும் அவரது அன்புக் கட்டளையும் வேண்டுமா? படைப்பும் விலக்கப்பட்ட இன்பமும் வேண்டுமா? தீவினை செய்கிறவன் எண்ணும்போது, அவன் கடவுளை எதிர்க்கிறான்; படைப்பை வரவேற்கிறான். கடவுளைப் புறக்கணித்து, தனக்கு இவ்வினாடி இன்பம்தரும் ஒரு படைப்பைக் கடவுளுக்கு மேலாகத் தெரிந்து கொள்கிறான்.

ஆதலால், அவன் தன் தீவினைக்குப் பரிகாரம் செய்து இறைவனின் மன்னிப்பைக் கோரினால், முதல் அலுவலாக அந்தப் படைப்பினின்று விலக வேண்டும். அந்தப் படைப்பில் பற்றுக்கொண்டு, அதே வேளையில் பாவத்தினால் இறைவனுடன் முறிந்த தொடர்பை மீண்டும் பொருத்துவதெனில், அது கூடாத காரியம்.

அந்தப் படைப்பினின்று விலகுவதன் நோக்கம் இயல்புக்கு மேலானதாக, இறைவன்பால் கொண்ட அன்புச் செயலாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பயனில்லை. பள்ளியில் ஒருவன் திருட்டு வேலையை மிகத் திறமையுடன் செய்து வருகிறான். ஒரு நன்னாள் அவன் மனத்தில் ஒரு குழப்பம் ஏற்படுகிறது. தன் தவற்றை உணருகிறான். அத்தொழிலைக் கைவிடத் தீர்மானிக்கிறான். இத்தீர்மானம் தன்னிலேயே மெச்சத்தக்கதாயினும், அவனது உள்நோக்கம் என்னவென்று அறியவேண்டும். அகப்பட்டால் பள்ளியை விட்டு நீக்குவர் என்ற அச்சத்தின் காரணமாக அவ்வாறு அவன் தீர்மானித்தானாயின், அது உண்மையான கழிவிரக்கமன்று. உயரிய நோக்குடன், இறைவன்மீது கொண்ட அன்பிலிருந்து புறப்பட்ட வருத்தமன்று. ஆதலால், அது போதாது. அவனது துக்கம் இறைவனை நோகச் செய்ததை குறித்து ஏற்பட்ட துக்கமாயிருக்க வேண்டும். இறைவனுடன் மீண்டும் தொடர்பு கொள்ள அவரை நாடுவதாயிருக்க வேண்டும்.

ஆகையால், மெய்யான கழிவிரக்கம் ஒருவனிடமிருப்பின், அவன் கடவுளுக்குமுன் தன் குற்றங்களை ஒத்துக்கொள்வான் அவற்றிற்காக மனம் வருந்துவான். இனி அவற்றைச் செய்வதில்லையென உறுதி கொள்வான். அப்போது இறைவன் அவனுடைய பாவங்களை மன்னிப்பார். மீண்டும் அவனைத் தம் குழந்தையாக ஏற்பார். அவனும் அவருக்கு விருப்பம் தரும் முறையில் நடக்க முயல வேண்டும்.

ஆதலின் ... ...

1. கடவுளின் நன்மைத்தனத்தையும் தூய்மையையும் எண்ணிப் பார்ப்போம்.

2. நம் தீவினை—சொல், செயல், விருப்பம் அனைத்தையும் நினைத்துக்கொள்வோம்.

3. அவற்றிற்காக உண்மையாகவே வருந்துகிறோமென இறைவனிடம் எடுத்துக் கூறுவோம்.

4. இனி அவ்வாறு நடப்பதில்லையென்று உறுதி கூறுவோம்.

5. செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக. பலருக்கும் நன்மாதிரிகையுள்ள நல்வாழ்வு வாழ்வோம்.

இரவுதோறும் படுக்கச் செல்லுமுன் அன்றைக்கு எவ்வாறு நடந்துள்ளோமென்று ஒருகணம் நம்மையே ஆராய்ந்து பார்ப்பது மிகச் சிறந்த வழக்கம்.

மாலைப் பிரார்த்தனை

அன்பே உருவான என் இறைவா!
உம்மை நான் புகழ்கிறேன்! போற்றுகின்றேன்!
நீர் எனக்களித்துள்ள கொடைகளுக்கு நன்றி [கூறுகின்றேன்!
இன்று உம்மை நோகச் செய்திருப்பின்,
என் குற்றத்தை உணர்ந்து அதற்காக மனமுருகச் [செய்யும்.

ஆராய்வு :—

1. இன்று கடவுளை நினைத்தேனா? வழிபட்டேனா?
2. மனச்சான்றின் குரலொலிக்கு இசைந்து நடந்தேனா?
3. சொல், செயல், நினைவு, வாழ்வு இவற்றில் நேர்மையுண்டா? தூய்மையுண்டா?
4. என் கடமைகளைச் செவ்வனே செய்தேனா?
5. பிறருக்கு தீங்கு நினைத்தேனா? பிறரை நோகச் செய்தேனா?

6. பிறருக்கு என்னாலான உதவி செய்தேனா? ஆறுதல் சொன்னேனா?

என் அப்பனே! நான் என் குற்றங்களை உம் திருமுன் ஏற்றுக்கொள்கிறேன் அவற்றிற்காக மிக்க மனம் வருந்து கிறேன். இத்துணை அன்புள்ள உம்மை நோகச் செய்த மைக்கு மனமுருகுகிறேன். இனி நல்ல குழந்தையாக உமது திருவுளப்படி நடப்பேன்.

வினா விடை

1. தீவினை ஆவதென்ன?

கடவுளின் சட்டத்தை மீறுவதே தீவினை. மறச்செயல், பாவம்.

2. பாவம் பெரிய தீமையா?

ஆம், கர்த்தரும் படைத்தோருமாகிய இறைவனுக்கு எதிராக எழுந்து, அவரை நிந்திக்கிறோம்.

3. கழிவிரக்கத்துக்குரிய பண்புகள் யாவை?

   1. நம் பாவங்கள் இறைவனுக்கு எதிரானவை என்று ஒத்துக்கொள்வது.
   2. நல்ல தந்தைக்குக் கொடுத்த வருத்தத்தை நினைத்து மனம் துக்கிப்பது.
   3. மீண்டும் பாவத்தைச் செய்வதில்லை என்னும் உறுதி.
   4. வருவித்த நிந்தனைக்கு ஈடு செய்தல்.

---

10. பரந்த மனப்பான்மை

நம் தமிழகத்தில் பற்பல சமயங்கள் இருக்கின்றன. பெரும்பான்மையோர் இந்துக்கள். அதற்கு அடுத்தபடியாகக் கிறிஸ்தவர்கள். அதன்பின் மகமதியர், இன்னும் பல சமயங் களும் இருக்கக்கூடும். இந்துக்களை எடுத்துக்கொண்டாலும்,

சிவனைத் தொழுவோருமுளர்; விஷ்ணுவை வழிபடுவோருமுளர், பிரமனைப் போற்றுவோருமுளர். நமது பள்ளியை எடுத்துக்கொண்டால்கூட அதிலும் பல சமயத்தவர் இருப்பதைக் காண்போம்.

சமயம் சம்பந்தப்பட்ட மட்டும் நம்மிடம் பரந்த மனப்பான்மை இருப்பது அவசியம், அதாவது நாம் பிற சமயத்தவரை ஒருபோதும் சிறுமைப்படுத்தலாகாது. அவர்களுடைய கோட்பாட்டையும் சடங்குகளையும் எள்ளி நகையாடலாகாது; நாம் எந்தச் சமயத்திலிருப்பினும் மற்றச் சமயத்தாருக்குரிய மதிப்பைக் கொடுக்கவேண்டும். நாம் அனைவரும் தமிழ்த் தாயின் மக்கள். ஒரே நாட்டின் பிள்ளைகள் நம் மனச்சான்றுக்கு எந்தச் சமயம் உண்மையானதெனத் தெரிகிறதோ, அதில் நாம் இருந்து வழிபட அரசியல் நமக்கு உரிமை கொடுத்துள்ளது. இந்த உரிமை இந்திய அரசியல் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. ஆதலின், பிறர் தங்கள் சமயக் கோட்பாட்டின்படி வாழ அவர்களுக்குள்ள உரிமை எவ்வகையிலும் இடையூறாயிருக்கலாகாது.

பிற சமயத்தவருடன் நன் முறையில் உண்மையை உணரும் நோக்குடன், ஆராய்ச்சி மனப்பான்மையுடன் உரையாடலாம்; கேட்டறியலாம்; அவர்களுடைய சமய நூல்களை ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் இழிவுபடுத்துவது தவறு.

உண்மைச் சமயம் தாழ்ச்சியையும், பிறரன்பையும், மனச்சான்றையும் மதிக்கத் தூண்டும்,

தாழ்ச்சி: சமயப் பற்றுள்ளவன் கடவுளுக்கு முன் தன் சிறுமையை உணர்வான் அவருடன் செபத்தினால் உறவு கொள்வான். தன்னிடமுள்ள எல்லா ஆற்றலும் கொடைகளும் அவரிடத்தினின்று வந்தவை என்பதை ஏற்றுக்கொண்டு மமதையை அகற்றி, படைப்பில் தானும் ஒருவன் என்ற எண்ணத்துடன் வாழ்வான்,

பிறரன்பு: சமயப் பற்றுள்ளவன் மனுக்குலம் ஒன்றே. அதன் தகப்பன் கடவுள் ஒருவரே என உணர்ந்து, மற்ற எல்லாரையும் உடன் பிறந்தாராகக் கருதுவான்.

மனச்சான்றை மதித்தல் : ஒவ்வொருவரும் தன் மனச்சான்றின் குரலொலியின்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள். ஆதலின், ஒருவனுக்கு எந்தச் சமயம் உண்மைச் சமயம் எனத் தோன்றுகிறதோ, அதன்படி கடவுளை வழிபட அவனுக்கு உரிமையுண்டு; வழிபடுகிறான். அவன் ஆராய்ச்சியின் விளைவாக, வேறு சமயம் இறைவனிடமிருந்து வந்ததெனக்கண்டு, அதில் தன் உள்ளம் தேடும் அமைதியை அடையக்கூடுமென அறிந்து, அந்தச் சமயத்தை நாடுவானாகில், அவனுக்கு உரிமையுண்டு. அவனை எவரும் தடுக்கக்கூடாது. எனவே, ஒருவனை அச்சுறுத்தி அல்லது வலுக்கட்டாயப்படுத்தி பிற சமயத்தில் சேரச் செய்வதும் கூடாது. புற சமயத்தை நாடிச் சேருபவனை அச்சுறுத்தி, சாதிக் கட்டுப்பாடு ஆனவற்றால் தள்ளிவைத்துத் தடை செய்வதும் கூடாது; ஒவ்வொருவனும் தன் மனச்சான்றின்படி நடக்க உரிமையளிக்க வேண்டும்,

இவ்வாறு நடந்தால், நாம் அந்தப் பரந்த மனப்பான்மையுள்ளோராயிருப்போம்.

வினா விடை

1. மற்றச் சமயங்களைப் பற்றிப் பரந்த மனப்பான்மை கொண்டிருப்பது என்றால் என்ன ?

மற்றச் சமயத்தவரை ஒருபோதும் சிறுமைப்படுத்தக் கூடாது. தங்கள் மனச்சான்றின்படி வழிபடுவதற்கு அவர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும்.

2. ஒருவன் தன் சமயத்தை மாற்றலாமா ?

வலுக்கட்டாயத்தினால் ஒருவனை மாற்றச்செய்வது தவறு. உண்மையை ஆராய்ந்தறிந்து, தன் மனச்சான்றின் அமைதிக்குத் தானாக மாற்றும்போது அவனுக்குத் தடை போடுவதும் தவறு.

II. சமூகம்

1. சமூக நோய்

நம் நாட்டில் சமூக அமைப்பு மிகப் பாராட்டுக்குரியதாக இருக்கிறதென்று சொல்லக்கூடுமா? சென்னை போன்ற பெரிய நகரங்களுக்குச் சென்றால் வானளாவித் தலை தூக்கி நிற்கும் பொதுக் கட்டடங்களையும், அரசு நிலையங்களையும் கண்டு மலைக்கின்றோம். ஆனால் அவையருகில், அவற்றிற்கு முட்டுக்களாய் அமைந்தன போன்றுக் காட்சியளிக்கும் சிறு சிறு குடிசைகளைக் கண்டு மனம் வருந்துகிறோம்.

நம் தாயகத்தில் பெரும் பெரும் வீடுகள் இருக்கின்றன. அங்கு மின் விசிறிகள் சுழல்கின்றன. இரவில் மின் விளக்குகள் ஒளி வீசுகின்றன. அங்குள்ள அனைவரும் நாகரிக உடையணிந்து முகத்தில் வாசனைப் பூச்சுப் பூசி வசதி வாழ்வு வாழ்கின்றனர்; வேளா வேளை அருஞ்சுவை உணவு அருந்தி இன்புறுகின்றனர்.

சற்றுத் தொலைக்கு அப்பால் ஏழை மக்கள் சாக்கடை ஓரங்களில் குச்சுக்களைக் கட்டிக்கொண்டு ஏழு எட்டுக் குழந்தைகளுடன் குடும்பமாக வாழ்கின்றனர். அவர்கள் முகத்தில் வாசனைப்பூச்சு கிடையாது. தெருப்புழுதி உடல் முழுவதும் படிந்திருக்கிறது. அவர்கள் உடை கந்தை. நாளுக்கு ஒரு வேளைகூட வயிறு நிறைய உண்டு அறியார். கால் வயிற்றுக் கஞ்சி மூன்று வேளையும் கிடைப்பதே அரிது. ஆயினும், பிள்ளைகளின் பெற்றோர் இருவருமே வருந்தி உழைக்கின்றனர். நாள் முழுவதும் உழைக்கின்றனர்.

எல்லா மக்களுமே இந்திய மண்ணில் உதித்தவர்கள். பாரதத் தாயின் தவப்புதல்வர்கள். ஆனால் பொருளாதார நிலையையும் உற்று நோக்கின், ஒரு சிலர் மட்டுமே இந் நாட்டு மக்களாகவும், பெரும்பான்மையோர் பிற நாடுகளி னின்று கொண்டுவரப்பட்ட அடிமைகளாகவும் தோற்றமளிக் கின்றனர்.

இத்தகைய சமூக அமைப்பு முறையுள்ளதா ? ஒரு சிலர் உல்லாச வாழ்வுவாழ, பெரும்பாலோர் உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றி, உறங்க உறைவிடமின்றி வாழ வழி கோலியுள்ள சமூகம் நீதியுள்ளதா ?

இந்த வேற்றுமையே இன்றைய சமூக நோயின் காரணம்.

வரலாற்றை நோக்குவோமாயின், மனிதன் தன் சொந்த முயற்சியினால் பல கைத்தொழில்களைச் செய்து, மன நிறைவுடன் வாழ்ந்து வந்தான் என்பதைக் காண்போம். அவன் வயலை உழுதான், மரத்தை வெட்டினான். நூலைத் திரித்தான், துணியை நெய்தான். தனக்குத் தேவையான வற்றையெல்லாம் அவனே செய்து கொண்டான்; சாதி வேற்றுமையின் கொடுமையினாலும், சமீன்தாரி முதலிய அமைப்புகளினாலும் ஏற்றத்தாழ்வு மக்களிடையே இருந்தது எனினும் மானத்துடன் வாழ்ந்து வயிறாரக் கஞ்சி குடித்து வாழ்வதற்கு வேலை கிடைத்தது; உழைத்தோருக்குப் போதிய ஊதியமும் கிடைத்தது.

இத்தகைய வாழ்வில், 18ஆம் நூற்றாண்டு இறுதியில் ஒரு புரட்சி ஏற்பட்டு எல்லாவற்றையும் தலைகீழாக்கியது. மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி இயந்திரங்களைக் கண்டுபிடித்தான்; அவற்றை நீராவியினால் இயக்கவுஞ் செய் தான். அதன் விளைவாகத் தொழிற்சாலைகள் பல தோன்றின. பலர் பல நாள் கடின உழைப்பினால் செய்துவந்த வேலையை இயந்திரம் ஒரே நாளில் செய்து முடித்தது. எனவே, உற்பத்தி பெருகினது. ஊதியம் மிகுந்தது. சிறு தொழில் நடத்தியவர்கள் வாழ்வில் இடிவிழுந்தது அவர்கள் தங்கள் கைத் தொழில்களைக் கைவிட்டனர். பிழைப்புத் தேடி வீடு களையும் கிராமங்களையும் விட்டுத் தொழிற்சாலைகளுள்ள நகரங்களுக்குச் சென்றனர். அங்கு வேலை கிடைக்கவில்லை. கிடைத்தவர்களுக்கு வீட்டு வசதியில்லை. ஆதலின், அந்த மக்கள் நகருக்குத் சுற்றுப் புறங்களில் சிறு குடிசைகளை அமைத்துக் கொண்டு சேரிகளில் வாழலாயினர். காலையில் தொலைவிலுள்ள தொழிற்சாலைக்கும், வசதியற்றச் சுரங்கங்

களுக்கும் கால்நடையாக விரைந்தனர். இவ்வாறு கால்கடுக்க நடந்து, வசதியின்றி வாழ்ந்து, நாள் முழுவதும் உழைத்தும் தொழிற் தலைவர்கள் அவர்களுக்குக் கொடுத்த கூலி குடும்பத்திற்குப் போதவில்லை. மனைவியும், மக்களும், பெண் மக்களுங்கூட வேலைக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நிற்க, பலர் செய்த தொழிலை ஒரே இயந்திரம் செய்ததால், வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடிற்று. பலருக்குத் தொழில் தெரிந்தும் அவர்களுக்கு வேலை கிட்டவில்லை; போட்டி உண்டாயிற்று. தொழில் அதிபர்களின் சொற்பக் கூலிக்கும் உழைக்க ஆட்கள் ஓடோடி வந்தனர். அதிபர்கள் செல்வத்தைப் பெருக்கினார்கள்; தொழிலாளர் கடனைப் பெருக்கினார்கள். இவ்வாறு முதலாளி பாட்டாளி என்னும் இரு வகுப்புகள் உண்டாயின. இவர்களிடையே பெரும் பிளவு ஏற்பட்டது. இருபாலர் உள்ளமும் எஃகானது.

இன்று பல சட்டங்களினால், இப்பிளவு அத்துணைப் பெரிதாயில்லை. பாட்டாளியின் 'நிலை' அத்துணை மோசமென்று கூறுவதற்குமில்லை, சென்ற நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் உண்மையாகவே தொழிலாளியின் நிலை மிக மோசமாக இருந்தது.

வினா விடை

1. சமூக நோய் யாது?

செல்வருக்கும் எளியோருக்குமுள்ள பெரும் வேற்றுமையினால் ஏற்பட்ட பகையில் இச்சமூக நோய் ஊன்றிருக்கிறது. சொந்த நீதியான முறையில் அனைவருக்கும் வழங்கப்படவில்லை. ஒரு சிலர் கையில் மட்டும் குவிந்திருக்கின்றது.

2. தொழிலாளியின் முக்கிய இன்னல்கள் எவை?

குறைந்த கூலி, நீண்ட நேர வேலை, வசதியற்ற வீடுகள் உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் தொழிற்சாலைகளும் சுரங்கங்களுமாம்.

2. கட்டுக்கடங்காத் தனி உரிமை

இந்தச் சமூக நோயைத் தீர்ப்பதற்குப் பலர் பல வழி வகைகளைக் காட்டியுள்ளனர். அவற்றில் முக்கியமானவை இரண்டு, கட்டுக்கடங்காத் தனி உரிமையும், கூட்டுரிமையுமாம்.

கட்டுக்கடங்காத் தனி உரிமையாளரின் கொள்கையின்படி தனியாருக்கே எல்லா உரிமைகளும் கடமைகளுமாம்.

தொழிற்சார்ந்த புரட்சியின் விளைவாக உற்பத்தி நிலையங்கள் பெருகின. ஊதியமும் ஆதாயமும் முதலாளிக்குக் குவிந்தன. செல்வம் கூடக்கூட இதயப் பற்றும் கூடிற்று. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்னும் முதுமொழி, போதாதென்ற மனமே பொன் செய்யும் சேவை என்றாயிற்று. முதலாளிகள் பணப்பித்தர்களாயினர். பணமிருந்தால் சமூகத்தில் உயர்வு உண்டு. பதவி உண்டு. அரசையே ஆட்டிவைக்கும் ஆற்றலுமுண்டு என்றுணர்ந்தனர். இவ்வாறு பணமும் முக்கிய இடம் பெற்றது.

ஒருவன் இரு வகையில் பொருளை ஈட்டலாம். தன் ஆற்றலினால் பொருள்களை உற்பத்தியாக்கி ஆதாயம் பெறலாம் அல்லது மற்றவனுக்கு உழைத்து ஊதியம் பெற்றுப் பொருளை ஈட்டலாம். ஒரு குடியானவன் தன் பணத்தைக் கொண்டு இரு காளைகளை வாங்குகிறான். தன் சிறு நிலத்தை உழுது பயிரிடுகிறான். அவனது உழைப்பின் பயனாகக் கிடைத்த விளைச்சல் அவனுக்கே சொந்தம் என்பதில் யாதொரு ஐயமுமில்லை

வேறொருவனிடம் பல வேலி நிலமிருக்கிறது பணமும் இருக்கிறது. ஆனால் நிலத்தைப் பயிரிடும் அறிவும் ஆற்றலுமில்லை. அதே தெருவில் ஒரு குடியானவன் இருக்கிறான். வறியவன்; ஆனால், வலிமையுள்ளவன், மழை வெயிலெனக் கருதாது மாடுபோல் உழைக்கும் தன்மையுள்ளவன், அவனிடமோ மாடுமில்லை, நிலமில்லை, காசுமில்லை, ஆனால்

அறிவும் ஆற்றலும் உள்ளன. இவ்வாறு உற்பத்திச் செய்ய இயலாத இரு வகுப்பினர் சமூகத்தில் தோன்றினர். முதலைக் கொண்டிருப்பவன் முதலாளியானான்; உழைப்பைக் கொண்டிருப்பவன் தொழிலாளியானான்.

முதலாளி தொழிலாளியின் உதவின்றித் தன் முதலினால் யாதொன்றும் செய்ய இயலாதென்பதை நன்குணர்ந்தான். ஆனால், அவன் உணரத் தவறினது தொழிலாளியும் தன்னைப்போன்ற ஆறறிவுப் படைத்த மனிதன் என்பதே. முதலாளி அவனை ஒரு கருவியாக மட்டும் கருதினான்; மனிதனாக அன்று. ஆதலின், அவன் கொடுக்கும் கூலியை உற்பத்தி செலவில் சேர்த்துக் கணக்குப்பார்த்தான்; தனக்கு வரும் ஆதாயத்திலன்று. வேலையில்லா நிலைமையினால், மக்கள் எத்துணைக் குறைந்த கூலிக்கும் வந்தமையினால்; குறைந்த கூலி கொடுத்தான்; உற்பத்தியை மிகவும் பெருக்கினான்; பெரும் ஆதாயத்தை அடைந்தான்.

தொழிலாளியின் கடின உழைப்பினால் வந்த இந்த ஆதாயம் யாருக்குச் சொந்தம்? முதலாளி முதலைக் கொடுத்தவன்; தொழிற்சாலையை அமைத்தவன்; இயந்திரங்களை வாங்கினவன்; காலாகாலத்தில் அவற்றைப் பழுதுபார்க்கவோ, அவற்றிற்குப் பதிலாகப் புது இயந்திரங்களையோ வாங்கக் கடமைப்பட்டவன். ஆனால், அந்த இயந்திரங்களைத் திறமையுடன் ஓட்டி, உற்பத்தியைப் பெருக்கி, பெரும் ஆதாயத்தைப் பெற்றுத் தந்தவர்கள் தொழிலாளிகள். ஆனால் வரவு செலவு பார்த்த பின்னர் இரண்டு இலட்சம் ரூபாய் ஆதாயமாயிருப்பிலும், அந்தத் தொகையை மூலதனத்தில் பங்குகொடுத்த முதலாளிகளுக்கு மட்டுமே பகிர்ந்து கொடுத்தனர். தொழிலாளிக்குக் கொடுக்க அந்தச் சொற்பக்கூலி போதுமென்று எண்ணினர். எதிர்பாராத காரணத்தினால் தொழிலுக்குச் சேதம் வந்தால், தொழிலாளிகளின் கூலியைக் குறைத்தனர்; அல்லது சில்லரை வேலையினின்று நீக்கினர். இதுவே கட்டுக்குட்படாத் தனி உரிமையின் விளைவு.

மேலும், இந்தக் கட்டுக்கடங்காத் தனி உரிமையாளரின் கொள்கைப்படி பொருளாதாரத் துறையில் அரசு தலையிட

லாகாது என்பதாகும். முதலாளிகள் தங்கள் விருப்பம்போல் போட்டியிட்டு ஆதாயம் பெறுவதை அரசுகூடத் தடுக்கக் கூடாது. ஒருவன் நகரில் நான்கு வாடகைப் பொறி வண்டிகள் வைத்து நடத்துகிறான் என்று கொள்வோம். கிலோவுக்கு 40 பைசா வாடகை. பெரிய முதலாளி அவனை விழுங்கும் நோக்கத்துடன் அதே நகரில் இருபது வண்டி களைக் கிலோவுக்கு 20 பைசா வாடகைக்கு ஓட்டுகிறான். சிறு முதலாளி என்செய்வது ? 40 பைசாவுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டால். வண்டி ஓட்டிக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கமுடியாது. முதலுக்கே மோசமாகிவிடும். ஆதலின் அவன் தன் பொறி வண்டிகளை விற்றுவிட்டு, இந்தத் தொழிலினின்றே விலகிக்கொள்கிறான், இப்பொழுது நகரில் ஓடும் வாடகை வண்டிகளெல்லாம் பெரிய முதலாளியுடையன. போட்டிக்கு ஆளில்லை அவன் வாடகையை எத்துணை உயர்த்தியபோதிலும், மக்கள் ஏசிக்கொண்டேனும் கேட்டதைக் கொடுத்துத்தானே ஆகவேண்டும். இத்தகைய கட்டு மீறும் தனி உரிமையில் அரசுகூடத் தலையிடக்கூடாதென்பது முறையா ?

இவ்வாறு கட்டுக்கடங்காத் தனி உரிமையாளர் தொழிலாளிகளுக்குக் கூலி கொடுப்பதிலும் தங்கள் விருப்பப்படி நடக்கவிடவேண்டும் ; அரசு குறுக்கிடக் கூடாதென்கின்றனர். தொழிலாளர்கள் தங்கள் தேவைகளை எடுத்துக் கூறச் சங்கங்கள் அமைக்க முயன்றால், அவற்றைத் தொடங்க முதலாளிகள் விடுவதில்லை ; அல்லது அவற்றிற்கு முட்டுக் கட்டையாய் நிற்பார்கள்.

இதுதான் கட்டுக்கடங்காத தனி உரிமையாளரின் சீர் திருத்தம் இதனால் சமூகம் வளம் பெறும் என்று சாதிக் கின்றனர்.

வினா விடை

1. கட்டுக்கடங்காத தனி உரிமையின்படி மானிட வாழ்க்கை யின் நோக்கம் என்ன ?

பணம் ஈட்டுவது. இம்மையில் அதைக்கொண்டு உல்லாச மாக வாழ்ந்து, அரசிலும் ஆதிக்கம் பெறுவதாகும்.

2. முதலாளிகளுக்கும் தொழிலாளருக்கும் ஆதாயத்தில் தகுந்த பங்கு வழங்கப்படுகிறதா ?

இல்லை தொழிலாளருக்கு குறிப்பிட்ட கூலி மட்டுமே, ஆதாயம் முழுவதுமே முதலாளிக்குச் சொந்தமாகிறது.

2. பொருளாதாரத் துறையில் அரசு குறுக்கிடலாமா ?

அவர்கள் கொள்கையின்படி அரசு தனியார் உரிமையில் தலையிடக்கூடாது; அவர்கள் முயற்சியைக் கட்டுப்படுத்தக் கூடாது. அவர்கள் விருப்பம்போல் விட்டுவிட வேண்டும்.

4. அரசு குறுக்கிடாவிடில், தொழிலாளருக்கு நன்மைதானா ?

இல்லை. முதலாளிகள் தங்கள் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் கூடவும் தங்கள் குறைகளை எடுத்துரைக்கவும் விட மாட்டார்கள், யாதொரு உதவியின்றி அவர்கள் அவதியுற வேண்டியதுதான்,

---

3. கட்டுக்கடங்காத் தனி உரிமை தவறானது

இந்தக் கட்டு மீறிய தனி உரிமையை நாம் ஏற்றுச் சமூக நோயைத் தீர்க்க முடியாது. காரணம், இது தவறான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது; ஆதலின் இது நிலைத்து நிற்காது.

1. இந்தக் கொள்கையினரது வாழ்க்கையின் கதியே தவறானது: மனிதன் இவ்வுலகிலிருப்பது உண்டுக்களித்து உல்லாசமாக வாழ்வதற்கென்று எண்ணுகிறது. அந்த வழி வாழ்வைக் கொடுக்க கூடியது செல்வம். எனவே, இக்கொள் கையினர் செல்வத்தைத் தெய்வமெனப் போற்றி வழிபட்டு வருகின்றனர். வசதி வாழ்வு தவறானதன்று. ஆனால், பிறருக்கு அதிலும் தொழிலாளிக்கு அநீதி இழைத்து, அவர்

களுக்குரிய கூலியைக் குறைத்து அவர்களுடைய குடும்பங்களையும் வறுமையிலாழ்த்தி, தாங்கள் உல்லாச உயர் வாழ்வு வாழ்வது முறையா ? நீதியா ? முதலாளிக்கு மன அமைதி ஏற்படுமா ? தொழிலாளி தன்னைப் பகைக்கிறான். வெறுக்கிறான் என்றுணரும் முதலாளியின் உள்ளம் அமைதியுறுவது எங்ஙனம் ? உண்மை அமைதி ஊன்றியிருக்க வேண்டுமாயின், அவன் எல்லாருடைய உரிமைகளையும் கடமைகளையும் மதிக்கவேண்டும்; அவற்றிற்கு ஊறுவிளைவிக்கும் அனைத்தையும் அகற்றவேண்டும். வண்டியின் உருளையைப் போலச் செல்வம் இன்று இருக்கும் நாளைக்குச் சென்றுவிடும், செல்வம் எப்பொழுதுமே செல்வோம், செல்வோம் என்று கை மாறிக்கொண்டே இருக்கிறது. ஆதலின் செல்வத்தை நம்பி ஒருவன் தன் வாழ்க்கையையோ, சமூகத்தையோ சீர்திருத்தி அமைப்பது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதை ஒக்கும்.

2. கட்டுக்கடங்காத தனி உரிமை தன்னலத்தையே நாடித் தேடுகிறது; அதைப்போற்றி வளர்க்கிறது. தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு சீர்திருத்தம் பொதுநலத்தை நாடும் சமூக நோயைத் தீர்க்க முடியுமா ? ஒரு சிறு குடும்பத்திலும் கூடத் தாய், தந்தை பிள்ளைகள் அனைவரும் தன்னலம் நாடித் தேடி உழைத்தார்களாயின், அதை ஒரு குடும்பம் என்று சொல்லக்கூடுமா ? அந்தக் குடும்பம் உறுப்பெறுமா ? அவ்வாறிருக்க மாபெரும் குடும்பமாகிய சமூகத்தைத் தன்னலத்தோர் பெரும்பான்மையில் இயக்கி வந்தால், சமூகம் சீரடைவது எங்ஙனம் ? சமூகத்தில் அனைவரும் தன்னலம் மறந்து, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சேவை மனப்பான்மை, தியாக மனப்பான்மையுடன் பொது நலனுக்காக உழைப்பதே முறை. வறியோருக்கு வேலை தருவதும், எளியோருக்கு உதவி புரிவதும் நோயாளிகளுக்குத் தனி உதவி செய்வதும் சமூகத்தின் ஒவ்வொருவருடைய கவலையாயிருத்தல் தேவை அப்போது சமூகம் சீரோங்கும்; அது வளம்பெறும். அதற்கு மாறாக கட்டுக்கடங்காத் தனி உரிமை கொண்டு, பிறரை

விழுங்கி ஏப்பம் விடும், பணப்பித்தர்களாய், தன்னல முள்ளோராயிருப்பின் அமைதியான, நீதியுள்ள சமூகம் ஒரு போதும் உருவாகாது. இதில் ஐயமேயில்லை.

1. இந்தத் தனி உரிமை மக்கள் அனைவரும் சமம். அனைவருக்கும் கடமைகளும் உரிமைகளும் உள என்னும் அடிப்படையை மறுத்து, அதன்மீது தன் சீர்திருத்தத்தை எழுப்புகிறது. முதலாளிகள் பலர் சமூகத்துக்குத் தேவையான பொருள்களை உற்பத்தியாக்கும் தொழிலாளரைத் தாழ்ந் தோரெனக் கருதுகின்றனர்; சிலர் அவர்களை உயிருள்ள, தன்மானமுள்ள மக்களென்றும் எண்ணுவதில்லை. இதனால், அவர்களுக்குரிய உரிமைகளைக் கவனிப்பதில்லை.

கட்டுமீறிய தனி உரிமையினின்று விளையும் தீமைகள் :

1. பாட்டாளிகள் அடிமைகளாகக் கருதப்படுகின்றனர். முதலாளிகள் அவர்களிடமிருந்து மிகுதியான வேலையைப் பெறுகின்றனர். ஆனால் குறைந்த கூலி கொடுக்கின்றனர். அவர்கள் தங்கள் நிலையை எடுத்துரைத்துப் போராடுவதற் குரிய உரிமைகளையும் மறுக்கின்றனர். முதலாளிகள் மிகுதி யாகச் சுரண்டிப் பணத்தைச் சேமிக்கின்றனர்.

2. இதனால் முதலாளிகள் வரம்புமீறிய அதிகாரத்தைப் பெறுகிறார்கள். தங்கள் செல்வப் பெருக்கினால், ஒரு பொருள்மீது தனி உரிமைக் குத்தகையைப் பெறுகின்றனர். இந்தத் தனி உரிமைக் குத்தகையின்படி ஒருவரோ அல்லது ஒரு குழுவோ, ஒரு வகுப்பினரோ ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யவும், வாங்கவும், விற்கவும் உரிமை பெறு கின்றனர். எடுத்துக்காட்டாக குழந்தைகள் உணவு போன்ற பால்மாவு ஒரு தொழிற்சாலைக்கு மட்டும் உற்பத்தி உரிமை, விற்பனை உரிமையென்றால், அந்த முதலாளி வைத்த விலையையே மக்கள் கொடுக்க வேண்டும். மாவு இல்லை யென்றால் வாளாயிருக்க வேண்டும். மட்டமான மாவை அல்லது கலப்படமானதை உற்பத்தி செய்து விற்றாலும் அவனைக் கேட்க ஒருவருமில்ல. அவர்கள் கொள்கைபடி

தான் அரசு இவற்றில் குறுக்கிடக் கூடாதே, இவ்வாறு பல தேவைப் பொருள்கள் அவர்கள் கையிருப்பின், சமூகத்துக்கு எத்துணை இன்னல்! இக்கட்டு!

3. முதலாளிகள் கையில் பணம் பெருத்திருப்பதால் அரசியலில் மிகச் செல்வாக்குக் கொண்டு, அரசினரைத் தங்கள் விருப்பம்போல் ஆட்டிவைக்கின்றனர்.

ஆகையால், கட்டுக்கடங்காத் தனி உரிமை சமூக நோயைத் தீர்க்கக்கூடிய மருந்து அன்று அதை நாம் ஏற்க முடியாது.

வினா விடை

1. கட்டுக்கடங்காத் தனி உரிமை ஏன் தவறானது ?

ஏனெனில் தவறான கோட்பாட்டில் அமைக்கப்பெற்றுள்ளது. பல தீமைகளின் ஊற்றாயிருக்கிறது.

2. அந்தத் தவறான கோட்பாடுகள் எவை ?

1. வாழ்க்கையின் கதியே இம்மையில் இன்ப வாழ்வு என்பது.

2. தன்னலத்தையே நாடுகிறது.

3. மனிதனின் உயர்வுத் தன்மையை மறுக்கிறது.

3. விளையும் தீமைகள் யாவை ?

1. முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுகிறார்கள்.

2. தனி உரிமைக் குத்தகையினால் பொருள்கள்மீது தனி உரிமை பெறுகிறார்கள்.

3. அரசியல் ஒரு சிலர் கையில் சிக்குண்டிருக்கிறது.

4. கூட்டுரிமை

எத்தகைய தனி உரிமையும் சமூக நோயைக் குணப் படுத்தாது, தனி உரிமையின் இயல்பே சமுதாயத்தைச் சீரழிப்பதுதான் ஆதலின் கூட்டுரிமை, பொதுவுடைமை மட்டுமே சமூகத்தைச் சீர்படுத்தி, மக்களை வளம்பெறச் செய்யும் என்பது ஒரு சாராரின் கூற்று.

இவர்களது கொள்கையின்படி உற்பத்தி நிலையங்கள், போக்குவரத்துகள், சுரங்கங்கள். நிலங்கள், எல்லாம் அரசுக் குச் சொந்தம். ஒருவனுக்கும் தனி உரிமை எதிலும் இருக்கக் கூடாது. அரசு அளிக்கும் கடமைகளையும், உரிமைகளையும் தனி மக்கள் ஏற்று உழைக்கவேண்டும். அப்பொழுது சமூகம் சீருள்ளதாய் இருக்கும்.

இவர்கள் அரசு என்கின்றனரே, அது முடியரசா? மக்களிடமிருந்து வாக்குரிமை பெற்றுத் தேர்தலில் வெற்றி பெற்றுவந்த அரசா? இல்லை அவர்கள் குறிப்பிடும் அரசு ஆளுங்கட்சியே. அக்கட்சிதான் மக்களிடத்திலிருந்து அவர் களுக்குப் பதிலாக அனைத்தையும் நடத்தும். "உழைக்கும் வகுப்பினர் புரட்சிக்குரிய ஒரு கட்சியின்றி இருப்பது. தலைவ ரில்லாச் சேவையை ஒக்கும்" என்று முன்னாள் உருசிய வல்லாட்சியாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார். இந்தப் புரட்சிக்குரிய கட்சியே அவர்கள் குறிப்பிடும் அரசு.

இந்த அரசில் மக்களுக்குப் பேச்சுரிமை கிடையாது. தங்கள் கருத்துக்களை வெளியிடவோ, அரசினரின் குறை களை எடுத்துறைக்கவோ, நாளிதழில் விளம்பரப்படுத்தவோ உரிமையில்லை; விருப்பமான இடத்தில் விருப்பமான வேலை செய்யும் உரிமையும் மறுக்கப்படுகிறது. அரசே மக்களுக்குத் தேவையான வேலையைத்தரும், ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்குத் தக்கவாறு உழைக்கவேண்டும், அரசோ அவர் களது தேவைக்குத் தக்கதுபோல உணவும் உடையும் அளிக்கும்.

தனிச் சொத்துரிமையே சமூகத் தீமைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் என்பது அவர்களது அசைக்கமுடியாக் கருத்து. தனிச் சொத்துரிமையை ஆதரிப்பது முதலாளி சுரண்டுவதற்கு வழிகோலித் தருவதாகும் என்று கூறி, தனிச் சொத்துரிமையை முற்றிலும் ஒழித்து, அரசே எல்லாவற்றையும் கைப்பற்றுகிறது.

இத்தகைய கூட்டுரிமை அல்லது பொதுவுடமையினால், முதலாளித்துவம் மறையும்; வகுப்புவாதமற்ற ஒரு சமுகம் உருவாகும். அனைவரும் போரின்றிக் கவலையின்றிச் செழிப்புடன் இன்புற்று வாழ்வார்கள் என்கின்றனர்.

இந்த இன்பபுரி ஒரு நாளையில் உருவாகுவதுமன்று; அமைதியான முறையில் உருவாகுவதுமன்று. "தொழிலாளிகளின் வல்லாட்சி மிக மிகக் கொடுமையும் இரக்கமற்றதுமான போர்" என்று பொதுவுடைமையின் தந்தை லெனின் கூறியுள்ளார். ஆதலின், வகுப்புவாதமற்ற இன்பம் தரும்பும் சமூகத்தை அமைப்பதற்கு முதலாளிகளைப் பறிமுதல் செய்வதும், கடும் போர்புரிவதும் இன்றியமையாதவை.

ஆகையால், கூட்டுரிமையாளர் கூற்றின்படி அனைத்துலக முதலாளித்துவம் ஒழியவேண்டும். அவர்களை நசுக்கி ஒழித்தபின்னரே வர்க்கப்போர் நிற்கும். அரசும் மறையும், வகுப்பற்ற, இனமற்ற வேற்றுமையற்ற ஒரு புது சமூகம் உதிக்கும். மக்களும் இம்மையில் வளம்பெற்று வாழ்வார்கள்.

வினா விடை

1. கூட்டுரிமையின் கொள்கை என்ன ?

கூட்டுரிமையின் கொள்கைப்படி அரசே அனைத்தும். மக்கள் அரசுக்கு உட்பட்டுச் சொல்லியதைச் செய்ய வேண்டியவர்கள்.

2. பொதுவுடமையின் நோக்கம் என்ன ?

இம்மைப் பொருள்களைப் பெருக்குவதும், வகுப்பற்ற ஒரு சமுதாயத்தை உண்டுபண்ணுவதுமாகும்.

3. வகுப்பற்றச் சமுதாயத்தை உருவாக்குவது எங்ஙனம் ?

வகுப்பற்றச் சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தனிச் சொத்துரிமையை ஒழிக்கவேண்டும்; கடும் வர்க்கப்போர் புரியவேண்டும்.

---

5. கூட்டுரிமையும் தவறானது

நாம் அந்தக் கூட்டுரிமை அல்லது பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுச் சமூகத்தைச் சீர்திருத்த முடியாது. ஏனெனில், அந்தச் சமுதாயத்தில் மனிதன் மாபெரும் இயந்திரமாகிய அரசியல் ஒரு மறை அல்லது ஓர் உருளையாக இயங்குகின்றான். அவனுக்கு அரசு அளிக்கும் உரிமைகள் தான் உள. மனிதன் என்ற முறையில் ஒரு தொழிலைச் செய்யவோ, ஏற்கவோ, கைவிடவோ உரிமையில்லை. மக்களைத் தன் விருப்பம்போல் எந்தக் கல்வி நிலையத்துக்கு அனுப்பவும் உரிமையில்லை. அவர்களது எதிர்காலத்தை எண்ணிப் பொருள் சேமித்து வைக்கவும் உரிமையில்லை. இவ்வாறாயின் மனிதன் மனச் சுவாதீனமுள்ளவன் என்று கூறுவது எங்ஙனம்! ஆதலின் பொதுவுடைமைச் சமுதாயத்தில் மக்கள் அடிமைகளாகின்றனர்; தன்னுரிமையற்ற விலங்குகளாகின்றனர்.

இந்த வாழ்வைக் குறித்துப் பல ஆண்டுகளுக்கு முன் திரு. காமராசர் சென்னை மாநில அமைச்சராயிருந்தபோது நெல்லையில் ஓர் கூட்டத்தில் கூறியுள்ளதாக நாளிதழில் வந்த செய்தி; உருசியாவில் வாழும் மக்களுக்கு எந்தவிதமான குறைவுமில்லை என்கின்றனர். ஆனால், அந்த வாழ்வு சிறைவாழ்வுதான். நம்முடைய நாட்டிலே மக்களுக்கு ஏராளமான கடினங்கள் இருக்கின்றன. ஆனால், சிறையில் வேளாவேளைக்குச் சாப்பாடு கிடைக்கும்; இருக்க இடமும் கிடைக்கும்; பெரிய டாக்டரும் அங்கே உண்டு. பள்ளிக்

கூடமும் இருக்கின்றது. இவ்வளவு வசதிகள் சிறையில் இருந்தும், சிறைக்குப்போக எவரும் விரும்புவதில்லை, சுய மரியாதையுடன் அங்கே வாழமுடியாது என்று நினைக்கிறார்கள். உருசியாவிலுள்ள வாழ்வு இந்தச் சிறைவாழ்வுதான். இந்தமாதிரி வாழ்வு நமக்கு வேண்டுமா ?"

பொதுவுடைமை நாடுகள் அனைத்தைப் பற்றியும் இவ்வாறு கூறலாம்.

எந்த அரசின் தலையான நோக்கம் மக்களுடைய உரிமைகளைக் காப்பதும் அவர்களது பொது நலனுக்காக உழைப்பதுமாகும்? ஆதலின், அது தனி மனிதனின் உயிரையும், உடைமையும், சுதந்திரத்தையும், சுவாதீனத்தையும் காக்க வேண்டும். ஆனால், பொதுவுடைமை ஆளுங்கட்சிமக்களுக்கு வாக்குரிமை, பேச்சுரிமை, தனிச் சொத்துரிமை போன்ற அனைத்தையும் மறுத்து, அவர்களை மாக்களாக்குகின்றது.

மகாத்மா காந்தியடிகள் கூறியதாவது; என் திட்டத்தில் அரசு கட்டளையிடுவதற்கோ, தன் விருப்பத்தைக் கட்டாயப் படுத்துவதற்கோ, அமைந்ததன்று. அது மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே இருக்கவேண்டும்.

1. வகுப்புவாதமற்ற வேற்றுமையற்ற ஒரு சமூகத்தை உருவகக்கப் போவதாகப் பறை சாற்றுகின்றனர். கேட்பதற்கு சுவைமிகுக் கதையாயிருக்கக் கூடும்: நடைமுறையில் அது ஏட்டுச் சுரைக்காயாகவே முடியும். நமது கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒன்றைப்போல் இருக்கின்றனவா ? ஒரு குடும்பத்தில் பிறந்த ஐந்து குழந்தைகளும் அழகிலும் ஆற்றலிலும் அறிவிலும் உடல் வலிமையிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா ? இவ்வாறாயின், மாபெரும் சமூகத்தில் வேற்றுமையற்று அனைவரும் இருப்பது கூடுமா ?

சமூகத்தில் பற்பல தொழில்கள் உள்ளன; பற்பல சேவைகளை மக்கள் செய்யவேண்டும். எல்லாரும் பல்லக்கில் உட்கார்ந்து கொண்டால், அதைத் தூக்குபவர் யார்? பளுவான பல்லக்கைத் தூக்கிச் சுமப்பவர்களும்,

அமைதியாய் அதில் அமர்ந்திருப்பவர்களும் ஒன்று என்பது முறையா? தொழிற்சாலையில் பலர் வேலை செய்யும்போது, அறிவும் ஆற்றலுமுள்ள ஒருவன் அவர்களை மேற் பார்க்கின்றான்; கவனிக்கிறான்; கட்டளையிடுகிறான். அனைவரும் எங்ஙனம் ஒன்றாவர்? திறமையிலும், அறிவுக் கூர்மையிலும், ஆற்றலிலும்; வேலையிலுள்ள ஆர்வத்திலும் வேறுபாடுகள் இருப்பதால், சமூகத்தில் பல வகுப்புகள் இருக்கும். இது சமூகத்துக்கு ஊறு விளைவிக்குமா? இல்லை மாறாக பொது நலத்திற்குப் பெரும் உதவியாயிருக்கும். ஆனால், பல வகுப்பினரையும் வேறுபாடு காட்டாது நன்முறையில் நடத்த வேண்டும்; அவர்கள் முன்னேறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். தாழ்ந்தோர். அறிவிலிகள் என அவர்களைச் சிறுமைப்படுத்தலாகாது.

போரும்

3. பெரும் பகையும் நிலையான ஓர் அமைதியான சமுதாயத்தை உருவாக்க முடியாது. ஒருவர் ஒருவரை வெறுத்து, முதலாளிகளை ஒழித்து; வர்க்கப் போரில் இறங்கி, பொருளையும் உயிரையும் சேதப்படுத்தி, நாட்டைச் சீரழித்தா சமூக சீர்திருத்தத்தைப் புகுத்துவது? தீமைகளை அகற்ற வேண்டியதுதான்; நீதியுள்ள வழி வகையினால், பயன்படும் சட்டதிட்டங்களினால் அவற்றை நீக்குவதே அறிவு. "நான் 'அஹிம்சா'வின் வழியாக மக்களை என் கருத்துக்குத் திருப்பி, பகைக்கு மாறாக அன்பைப் பயன்படுத்திப் பொருளாதாரச் சமத்துவத்தைக் கொண்டு வருவேன்" எனக் கூறியுள்ளார் நம் நாட்டுத் தந்தை மகாத்மா அடிகள். அவர் நம் மக்களுக்குக் கற்பித்திருக்கும் பலாத்காரமின்மைக்கும் கூட்டுரிமைக்காரருடைய இனப்போருக்கும் எத்துணை வேறுபாடு!

4. இறுதியாக, கூட்டுரிமையினர் இம்மை வளத்தை மட்டுமே, அதிலும் சிறப்பாக வசதி வாழ்வை மட்டுமே நினைக்கிறார்களேயல்லாது. ஆன்மீகக் காரியங்களிலும் சமயம் சம்பந்தப்பட்டனவற்றிலும் யாதொரு அக்கறையும் கொள்வதில்லை. எனவே, உடலும், உள்ளமும் கொண்ட முழு மனிதன் மேம்பாடடைவதற்கானவற்றை அவர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை.

வினா விடை

1. கூட்டுரிமை ஏன் தவறானது ?

ஏனெனில், அது மனிதனை ஓர் அடிமையாக்குகிறது; அவனைச் சுவாதீனமற்றப் பொருளாக்குகிறது.

2. வகுப்பற்றச் சமூகத்தை உருவாக்க முடியுமா ?

முடியாது, சமூகத்தில் இயல்பாகவே ஆற்றலிலும், திறமையிலும் அறிவிலும் வேறுபாடுகள் இருக்கும். இத்தகைய வேற்றுமை பொது நலத்துக்கு உதவியாயிருக்கும்.

3. வர்க்கப்போரின் வழியாகச் சமூக அநீதியைத் தீர்ப்பது முறையா ?

முறையன்று பகையும் போருமே அநீதியானவை, அநீதியைக் கொண்டா அநீதியை நீக்குவது ?

---

6. சமூகச் சீர்திருத்தத்திற்கான அடிப்படை

சமூகத்தில் நோய் இருக்கிறது. அதைக் குணப்படுத்த வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் நோய்க்குக் கொடுக்கப்படும் மருந்து பயனுள்ளதாகத் தோன்றவில்லை. கட்டுக்கடங்காத் தனி உரிமையாளர் காட்டும் வழி தொழிலாளர்களை நசுக்குகிறது; கூட்டுரிமையாளருடையதோ அவர்களை அடிமையாக்குகிறது. ஆதலின், உண்மையான சிறந்த வழியை ஆராய்வோம்.

இந்தச் சீர்திருத்தம் சமூகத்தைப் பற்றியது, சமூகம் மக்களின் கூட்டம். ஆதலின், ஒரு சீர்திருத்தத்தைப் புகுத்து முன் மனிதனின் உயர்வுத் தன்மையையும் ஏற்று ஆராய்வது

இன்றியமையாதது, மிதியடி வாங்கச் செல்பவன், அவை அழகாயிருக்கின்றன, மிடுக்காய் இருக்கின்றன. நல்ல தோலில் செய்யப்பட்டுள்ளன, என்று மட்டும் கவனித்தால் போதுமா? அவன் தன் காலில் அணிந்து, தனக்குரியனவா என்று பார்க்கவேண்டும். ஏனெனில் அவை பெரியதாயிருப் பினும், சிறியதாயிருப்பினும், அவை அவனுக்குப் பயனற்றவை, அதுபோல, சீர்திருத்தம் கொண்டுவருமுன், அது மனிதனுக்கு நன்மை பயக்குமா, அவனுடைய நன்மைக்கும் உயர்வுக்கும் பொருத்தமா என்று ஆராயவேண்டும்.

1. மனிதனின் தன்மையும் உயர்வும் என்ன? அவன் ஒரு விலங்கு அல்லன். இயல்பு நாட்டத்தினால் இயங்குபவன் அல்லன். அவன் அனைத்தையும் பகுத்துப் பகுத்து ஆராயும் ஆற்றலையுடைய ஆறாமறிவைக் கொண்டவன். "மக்கள் தாமே ஆறறிவினரே" விலங்குகளுக்குப் புலனறிவாகிய ஐம்புலனறிவுமட்டுமேயுண்டு; மனிதனுக்கோ பகுத்தறிவாகிய ஆறாமறிவுமுண்டு, இதனால், இவன் காணக்கூடிய படைப்பு களில் மிகச் சிறந்த மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறான்.

விலங்குகளுக்குச் சுவாதீனம் கிடையாது. அவை தப்புகள் செய்யா, வாழ்க்கை நிலையை மேம்பாடாக்குவதற்கு வேண்டிய கருவிகளை அவை கண்டுபிடிக்க இயலா. சண்டா சமூகக் காலத்தில் தேனீக்கள் எவ்வாறு தங்கள் கூடுகளைக் கட்டினவோ, அவ்வாறே இன்றும் கட்டி வருகின்றன. பெட்டைக் கோழி முட்டையிடுமுன் எவ்வாறு ஊரெல்லாம் கொக்கரித்துப் பறைசாற்றியதோ, அவ்வாறே இன்றும் செய் கிறது. அவற்றினிடையே முன்னேற்றம் என்பதும் கிடையாது,

மனிதனுக்குச் சுவாதீனமுண்டு, நல்லது எது தீயது எது என்று அறிந்து நடக்கவேண்டியவன். தவறுகள் செய்யக்கூடியவன். மனத்தை அது போகும் போக்கில் போக விடக்கூடாது. நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனை விலக்கி, நல்லதனை நாடவேண்டும். அதுவே அறிவு என்று கூறியுள்ளார் திருவள்ளுவர்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனிதனுக்கு ஆன்மா என்னும் சித்துப்பொருள் உண்டு. சடலத் தன்மையற்ற, கலப்படமற்றத் தூய பொருள் அது. நீதி, அநீதி, தயை, அன்பு, இரக்கம், வெண்மை, தூய்மை, குரும்புத் தன்மை இதுபோன்ற நீளம்; அகலம், கனம், வடிவம் ஆன சடலத்தன்மையற்ற நினைவுகளை உற்பத்தியாக்கு கின்றது. இந்த ஆன்மா ஒரு சித்துப் பொருளானமையால், அதற்கு இம்மையிலும் மறுமையிலும் சாவுமில்லை. அழிவு மில்லை.

ஆகையால், மனிதனுக்குரிய அறிவும் அன்பும் தன் நினைவுகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தக்கூடிய சுவாதீனமும், அவன் படைப்புகளில் தனிச் சிறப்புள்ளவன் என்று காட்டுகின்றன. அவன் ஓர் ஆள், இறைவனின் அளவற்ற சுதந்திரத்தில் ஒரு சிற்றெனிலும் பங்கு பெற் றுள்ளவன், அதாவது, இறைவனின் சாயலாக உருவாக்கப் பட்டவன் தன் மனச் சுவாதீனத்தை நன்முறையில் மனச் சான்றின் குரலொளிக்கு இசைந்து பயன்படுத்தி வாழ்ந்து, மறுமையில் இறைவனின் பேறுபெற்ற பெருவாழ்வில் பங்கு கொண்டு எக்காலமும் வாழப் படைக்கப்பட்டவன்.

இந்த உண்மையினின்று உதிக்கும் விளைவுகளாவன :

1. மனிதன் கடவுளுக்காக வாழ்ந்து என்றும் கடவுளோடு இன்புற்றிருக்க வேண்டியவன். அவர் மனிதனை ஒரு சிறந்த கதியுடன் அமைத்து, அவனுக்கு அறிவும் மனதும் சுதந்திரமும் கொடுத்துள்ளார். ஆதலின், அரசாயினும், தனியாராயினும் அவனைச் சுவாதீனமற்ற ஒரு விலங்காகக் கருதி நடத்தக்கூடாது. கட்டுமீறிய தனி உரிமை அவனது உயர்த்தன்மையையும் மனச் சுவாதீனத்தையும் அலட்சியம் செய்கிறது. கூட்டுரிமை அவனை அரசுக்கு அடிமையாக்கு கிறது. இக்காரணத்தால்தான் நாம் இந்த இருசாரரின் கொள்கைகளை ஏற்கவில்லை.

2. மனிதனின் உழைப்பும் அவனது உயர்த்தன்மையை அழிக்கக் கூடாது. சில வேளைகளில் கை வண்டிகளில் மூட்டைகளை அடுக்கி ஒருவன் மாடுபோல் இழுத்துச் செல்வான். வயிற்றுப் பிழைப்புக்காக அவன் செய்கிறான் என்பது உண்மையே. நீதியும் அன்பும் நிலவும் சமூகத்தில் இவைப் போன்றவைக்கு இடமிருக்கக்கூடாது. எனவே, தொழில் அதிபர் மனிதன் தன் தன்மைக்கு ஏற்றவண்ணம், உடல் நலம் வளம்பெறக்கூடிய சூழலில் வேலை செய்வதற்கான வற்றை ஏற்பாடு செய்யவேண்டும். வசதியற்றத் தொழில் நிலையங்களிலும், காற்றுவராக் குகையையொத்த அறை களிலும் மணிக்கணக்காய் ஒருவன் வேலைசெய்தல் முறையா?

சமூக நோயைத் தீர்ப்பதில் நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு அடிப்படை உண்மை மனிதன் ஒரு சமூக பிராணி என்பதாகும்: எந்த மனிதனும், அவன் எத்துணைச் செல்வம் படைத்தவனாயினும், தானாகப் பிறர் உதவி நாடாது வாழமுடியாது. தாமாயிருக்கும் பண்பு இறைவன் ஒருவனுக்கே உரியது. மனிதக் குழந்தை குடும்பத்தில் பிறக்கிறது. அந்தக் குழந்தையைப்போல் உதவியை நாடும் பிராணி வேறெதுவுமில்லை. கோழிக்குஞ்சுகளை அவற்றின் தாயினின்று பிரித்துவிடலாம்; வளர்த்துக் காப்பாற்றலாம். குழந்தையின் தாய் இறந்துவிட்டால், அதை வளர்ப்பது எத்துணைக் கடினம்! வளரும் குழந்தைக்கு உணவு கொடுக்க வேண்டும். கல்வியூட்ட வேண்டும். இளைஞன் சமூகத்திலுள்ள பிறரோடு பழகுகிறான்; தன் ஆண்மாவை மேம்பாடுடையதாகச் செய்கிறான். நல்ல வயதில் வாழ்க்கைத் துணைவியைத் திருமணத்தின் வழியாக கொண்டு, குடும்பத்தை நிறுவுகிறான். மனைவி மக்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றிற்காக உழைத்துப் பொருள் ஈட்டுகிறான். இவனுடைய உழைப்பு பிறருக்குப் பயன் தருகின்றது; இவனுக்கோ பணம் கொணர்கின்றது. இவ்வாறு மனிதன் ஒரு சமூகப் பிராணியாக உழைத்து உதவி செய்து வாழ்கிறான்.

இதனின்று புலனாகும் உண்மை யாதெனில் தன் நலத்தைக் கொண்டு சமூக நோயைத் தீர்க்க முயலக்கூடாது. பொது நலனுக்காக அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். செல்வம் படைத்தோர் தம் நலனுக்காகத் தொழிலாளர்களைப் பலியாக்கக் கூடாது. பொதுநலனென்று சொல்லும்போது, இம்மை உடல் வளத்தையும் வசதி வாழ்வை மட்டும் நினைக்கக் கூடாது. மனிதன் வயறுமட்டுமில்லை, அவன் உடலும் உள்ளமும் கொண்டவன். ஆதலின், அவனுடைய அறிவு ஆற்றல், பண்பாடு, பொருளாதாரம், கலை எல்லாமுமே முன்னேற்றமடைவதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு சமூகத்தை அமைக்க முயல வேண்டும். எனவே, சமூகத்தை சீர்திருத்தி அமைக்க அனைவரும் தன்னலமற்றுப் பொதுநல மனப் பான்மையுடையவர்களாய் உழைக்க வேண்டும்.

வினா விடை

1. மனிதன் உயர்வுத்தன்மை எதிலிருக்கிறது ?

மனிதன் இறைவனின் உயிருள்ள சாயல் அறிவுள்ளவன் தன் செயல்களில் கர்த்தன்.

2. மனிதனின் இயல்பிலிருந்து வரும் விளைவு என்ன ?

அவன் சுவாதீனமுள்ள உயர் படைப்புயிரானதால் தனியாரோ அரசோ அவனைச் சுதந்திரமற்ற விலங்குபோல் நடத்தக் கூடாது.

3. மனிதன் சமூகப் பிராணி என்பதின் பொருள் என்ன ?

அவனுக்குப் பிறர் உதவி தேவை; அவனும் பொது நலனுக்காக உழைக்க வேண்டும் என்பதேயாகும்.

4. பொதுநலமென்பது எது ?

ஆன்மீக நலன், கலை, பண்பாடு, உடல் நலம், வசதி வாழ்வு அனைத்தையும் சமூகப் பொதுநலன் எனக் குறிப்பிடலாம்.

7. வேலை

ஒவ்வொருவரும் தம்மையும் தம் குடும்பத்தையும் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குரிய பொருள்களை உழைப்பினால் பொருளீட்டி, கிடைக்கும் ஊதியத்தினின்று வாங்கவேண்டும். ஆகையால் எல்லாருமே வேலை செய்யவேண்டும். ஆயினும், நோயாளிகளையும், முதியோரையும், செய்ய இயலாதவர்களையும், கட்டாயப்படுத்துவது முறையன்று, சமூகம் இத்தகையோருக்கு உதவிபுரிய முன்வரவேண்டும்; இவ்வாறு உதவிசெய்வது அறச்செயல் என்பதை நினைவுகூரவேண்டும். ஆனால், வேலை செய்யக்கூடுமாயிருந்தும் சோம்பேறிகளாகச் சுற்றித் திரிவோருக்குச் சமூகத்தில் இடமில்லை; இருக்கக் கூடாது.

வேலை செய்வதில் யாதொரு இழிவுமில்லை. இன்றைய நாகரீகத்தில், செல்வரின் மகளிர் வீட்டிலும் தங்கள் கையால் வீட்டு வேலைகளைச் செய்வது இழிவு என்றதுபோல உணவு சமைக்கவும் ஆள் வைப்பர். இவர்கள் சாப்பிடும் உணவு செரிமானம் ஆவது எவ்வாறு? அடிக்கடி மருத்துவரைக் கண்டு, ஊசிபோட்டு வருவர். நம் பாட்டிமார்கள் தாங்களே எல்லா வேலைகளையும் செய்தனர். தண்ணீர் குடங்குடமாய்த் தூக்கிச் சுமந்தார்கள்; சோறாக்கினார்கள். மிளகாய் அரைத்தார்கள். எனவே முதிர்ந்த வயதிலும் நல்ல உடல் வலிமையுடன் கட்டுவிடா மங்கையராகக் காட்சியளித்தனர். அது அக்காலத்து நாகரீகம்.

எல்லா வேலையும் சமூகத்துக்குப் பயனுள்ளது. அதை ஒரு போதும் இழிவாக எண்ணக்கூடாது. அதில் ஈடுபட்டிருப்போரைச் சிறுமைப்படுத்தக் கூடாது. நம் நாட்டில் தோட்ட வேலை செய்வோரை மிகத் தாழ்ந்தோராகக் கருதுகிறோம். நெருங்கக்கூடா மக்களாக விலகிச் செல்லுகிறோம். அவர்கள் சமூகத்துக்குச் செய்யும் சேவை எத்துணைப் பெரிதென்று எண்ணிப் பார்த்ததுண்டா? ஒரு வாரம் அவர்கள்

வேலைக்கு வராவிடில் ஊரே நாறும், தோட்டியென இழிவு படுத்துகின்றோமே, நம் வீட்டுக் குழந்தைகளுக்குத் தோட்டி வேலை செய்வது யார் ? நம் தாயல்லவா ? நாமே படுத்த படுக்கையாக நாட்கள் பல கிடப்போமாயின், நமக்குத் தோட்டி வேலை செய்வது யார் ? நம் தாய்தானே! அதற்காக, நாம் நம் தாயை வெறுக்கிறோமா ? சிறுமைப் படுத்துகின்றோம் ?

நம் நாட்டில் இதுவரையில் உரைந்து கிடந்த சாதியின் கொடுமையினால், நம் மக்களில் சில வகுப்பினரைத் தாழ்ந்தோராகக் கருதி வந்தோம். அவர்களுக்கென்று குறிக்கப்பட்ட வேலையை நாம் செய்வது இழிவு எனக் கொண்டோம். அந்நிலை இப்பொழுது சற்று மாறி வருகிறது. பலர் தங்கள் உடைகளைத் தாங்களே துவைத்துச் சலவை செய்கின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு முடி அலங்காரம் செய்கின்றனர். இன்றைய இளைஞரும் ஏனையோரும் தாங்களே முகச்சவரம் செய்து கொள்வதை நாகரீகமாக எண்ணுகிறார்கள், இன்னும் பழைய தவறான எண்ணங்கள் முற்றிலும் மாறி உழைப்பில் எத்தகைய இழிவும் தாழ்வும் இல்லை என்ற நிலை வர வேண்டும்.

உழைப்பு மக்களுக்குப் பொறுப்புணர்வு தருகிறது. பிறரோடு ஒத்துழைக்கவும் பழகவும் ஒருவரொருவரைப் புரிந்து கொள்ளவும் அது அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், பொறுமை இதுபோன்ற மனிதப் பண்புக்களில் பயிற்சி கொடுக்கிறது. மேலும், மக்கள் தம் உழைப்பினால் சமூகத்துக்குச் சேவை செய்கின்றனர். மருத்துவர் பிறர் பிணியைப் போக்குகின்றனர்; ஆசிரியர் பிறர் அறிவின்மையை நீக்குகின்றனர். இவ்வாறு, அனைவரும் நாட்டின் பொதுநலனுக்காக உதவுகின்றனர்; நாட்டின் பயனுள்ள குடிமக்களாக விளங்குகின்றனர்.

இந்த உண்மையினின்று வரும் விளைவுகள் :

உழைப்பு இன்றியமையாததும் சிறப்புள்ளதுமானதினால் உழைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுமுண்டு; கடமையுமுண்டு.

1. ஒவ்வொருவருக்கும் வேலைசெய்ய உரிமையுண்டு : ஆனால், வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டை ஆட்டி வைக்கிறது. படித்தோரும் படிக்காதவரும் வேலையின்றி அவதியுறுகின்றனர். இந்த அவல நிலையை நீக்குவதற்கு அரசு பல முயற்சிகளை எடுக்கவேண்டும். ஐந்தாண்டு திட்டங்கள் போன்றவையினால் பலருக்கு வேலை கிடைக்கும்

அரசுமட்டும் இதுபற்றி அக்கறை எடுப்பது போதாது. பணம் படைத்தோர் தங்கள் வசதிகளைப் பெருக்குவதிலேயே கருத்தாயிராது, நம் மக்களில் பலர் மானத்துடன் வாழ்வதற்கே, வகையின்றி இருப்பதைக் கண்டு, தொழிற்சாலைகள், உற்பத்தி நிலையங்கள் போன்ற பலவற்றைத் தொடங்கி, இந்த வேலை யில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முன்வரவேண்டும்.

2. சமூகத்தில் ஒவ்வொருவரும்உழைப்பதற்குக்கடமையு முண்டு. சோம்பேறிகளாய்த் திரிவதும், காலத்தையும் காசையும் குடிவெறியிலும் சூதாட்டத்திலும் அழிப்பதும் மாபெரும் சமூகக் குற்றம், அவர்கள் தண்டனைக்குரியவர்கள் சோம்பல் எல்லாத் தீமைக்கும் உற்பத்தி நிலையம் என அறிவோம். ஆதலின், குடும்பத்திற்குப் போதுமான அல்லது மிஞ்சிய வருவாயுள்ளவர்கள் கூட, ஏதாவது சமூக சேவையில் ஈடுபட்டு, தங்கள் உழைப்பை இலவசமாக ஈவது மிகச் சிறந்தது.

வினா விடை

1. வேலை செய்வது தேவையா ?

ஆம், உழைப்பினால்தான் ஒருவன் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றக்கூடும்.

2. உழைப்பில் இழிவு உண்டா ?

இல்லை, எல்லாவகை உழைப்பும் மனிதனுக்கும் நாட்டுக்கும் மிகப் பயனுள்ளது. அதில் இழிவு ஒன்றுமில்லை,

3. அனைவரும் உழைக்கவேண்டுமா ?

ஆம். உழைப்பது அனைவருடைய உரிமையும் கடமையு மாகும், ஏனெனில் அது மனிதனுக்கும் சமூகத்துக்கும் இன்றியமையாதது.

8. தனிச் சொத்துரிமை

உழைப்பின் வழியாகத் தங்களுக்கு வேண்டிய பொருட்களைச் சேகரிக்க மக்களுக்கு உரிமையுண்டு; கடமையுண்டு. உலகிலுள்ள பலவகைப் பொருள்களையும் இறைவன் மக்கள் அனைவோருடைய பயனுக்காக உண்டாக்கியுள்ளாரேயன்றி. ஒரு சிலருக்கு மட்டுமல்ல அவை யாவும் அன்புக் கடவுளின் நன்கொடைகள், அனைவருக்கும் பொதுவானவை.

வானில் கதிரவன் உதிக்கின்றான். இரவில் நிலா தனது தண்ணொளியைப் பொழிகின்றது. விண்மீன்கள் கண்சிமிட்டி விளையாடுகின்றன. கடலின் அலை ஒலி உள்ளத்தில் இனிமையைப் பாய்ச்சுகின்றது. இவை போன்ற இயற்கைப் பொருள்களை நாம் நுகரலாகாதா.

ஆனால், ஆடுமாடுகள், தோப்புகள் போன்றவைகளை நான் என் உழைப்பினால் வாங்குகிறேன். அவை எனக்குச் சொந்தமில்லையா? என் சொந்த சொத்தாக அவற்றைப் பயன்படுத்தக் கூடாதா? குடும்பத்திற்குத் தேவையான சட்டி பானை, தட்டுமுட்டுகள், நாற்காலி முக்காலி போன்றவைகளை ஒருவன் தனிச் சொத்தாக வைத்துக்கொள்வதைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க இடமில்லை. ஆனால், நிலம் தோட்டந்துரவு, உற்பத்தி நிலையங்கள், சுரங்கம், ஊர்திகள், வீடுகள். ஒரே சொல்லில் ஆதாயம் தரக்கூடிய எல்லாம் அரசுக்கே சொந்தம்; தனி மனிதனிடம் இருக்கக் கூடாது. என்பது பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை.

நாம் இவர்கள் கொள்கையை ஏற்கமுடியாது. ஏனெனில் தனிச் சொத்துரிமை மனிதனின் தன்மையை ஆராய்ந்தாலே அவன் தனிச் சொத்து வைத்திருக்க அவனுக்கு உரிமை யுண்டு என்பதை அறிவோம்

மனிதன் அறிவுள்ளவன்! மனச் சுவாதீனமுள்ளவன் அவன் உயிர் வாழவேண்டும். தன் வாழ்க்கைக்குத் தேவை யானவற்றைச் சேகரிக்க அவனுக்கு உரிமையிருக்க வேண்டும் அவன் தன் உணவுக்கும் உழைப்புக்கும் பிறர் நோக்கி,

அவர்களுடைய அடிமையாக வாழ வேண்டுமாயின், தனக்கு விருப்பமானதை வாங்கவும் கூடாத நிலையில் உட்படுத்தப் படுவானாயின், அவன் சுதந்திரமுள்ளவன் என்று சொல்வதன் பொருளென்ன ?

தனி மனிதன் தக்க வயதில் திருமணம் செய்கிறான்; குடும்பத்தை நிறுவுகிறான். சமூகத்தின் அடிப்படையே குடும்பம். அரசு தோன்றுமுன் உலகில் இருந்த அமைப்பு குடும்பமேயாகும். அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவது யாருடைய கடமை ? குடும்பத் தலைவரின் கடமையன்றோ ? மனைவி மக்கள் வாழ்வதற்கும், வருங்காலத்தில் தன் பிள்ளைகள் கவலையின்றி வாழ்வதற்கும், அவன் பொருளைச் சேர்க்க, அவனுக்கு உரிமையில்லையா ? தன் முதிர் வயதிலும், நோயுற்ற நாட்களிலும் பிறரிடம் கை நீட்டாதபடி, சமூகத்துக்கு பளுவாயில்லாதபடி, தனக்கென்று சிறு சேமிப்பு வைப்பது தவறாகுமா ? அவன் தன் கடமையை ஏன் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் ? மக்களின் உரிமையை அரசு அபகரிக்க முனைவது ஏன் ?

தனிச் சொத்துரிமை ஆதரிப்பதற்கு இன்னும் ஒரு காரணமுண்டு. பொருளாதாரத் துறையின் கோணத்தினின்று நோக்கினும், நடைமுறையில் தனி சொத்துரிமை மிகப் போற்றதக்கது; சமூகத்திற்குப் பெரும் பயன்தர வல்லது. யாருக்கும் தன் சொந்தப் பொருளில் மிகுதியான அக்கரை இருப்பது இயல்பே. மாணாக்கள் எத்துணை எச்சரிக்கையுடன் உறை போட்டுத் தன் பாடப் புத்தகங்களை வைத்திருக்கிறான். பள்ளி நூல் நிலைய புத்தகங்கள் அவன் கையில் படும்பாட்டை அறியாதவர் யார் ? குடியானவன் தன் சொந்த நிலத்தை உழுது பயிரிடும் வகையையும், பிறர் நிலத்தை உழுது பயிரிடுவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனை வேறுபாடு இருக்கிறது. அதுவும் அரசுக்குச் சொந்தமான நிலமாயின், ஊருக்கு மாரடிக்க வந்தோரைப் போலச் சிறிதுநேரம் அவர்களுக்குமுன் உழைப்பதாகக் காட்டி விட்டுத் தன் வழி செல்வான். ஆயிரத்தில் ஒருவர் இருவர் பொது நலத்தினால் தூண்டப் பெற்றுத் தியாக மனப்பான்

மையுடன் ஆர்வத்துடன் அரசு நிலத்தையும் தங்கள் சொந்த நிலமாகக் கருதி உழைக்கக்கூடும். ஆனால் அவ்வாறு எத்தனை பேர்! உயர்ந்த நோக்குடன் தியாக உணர்வுடன் தொடங்கிய அரசியல் கட்சிகளிலுள்ள பலரே தன்னலப் பித்தர்களாய், பொருளை நாடிச் செல்வத்தைப் பெருக்குவதை இன்று நம் நாடு வருத்தத்துடன் காண்கிறது.

பொதுப் பணம், பொதுப் பொருள்கள் நாசப்படுவதை அரசின் தணிக்கையாளர் அரசைக் குறை கூறி ஆண்டு தோறும் அறிக்கை சமர்ப்பிக்கின்றனர். ஒரு காலத்தில் 'டாங்கிகளும்' 'ஜீப்புக்களும்' வெயிலிலும் மழையிலும் கிடந்து விணாயின என்பதை நாளிதழில் வாசித்துள்ளோம். எனவே சொல்லளவில் மக்கள் பொது நலத்துக்காக உழைப்பார்கள். உழைக்க வேண்டும் என்ற போதிலும், நடைமுறையில் ஒவ்வொருவரும் தன் சொந்த காரியத்தில்தான் முழு மூச்சுடன் உழைப்பார்கள்.

ஆதலின், மனிதனுக்கு இயல்பான தனிச் சொத்துரிமையை எவரும் ஒழிக்கலாகாது.

வினா விடை

1. தனிச்சொத்துரிமை என்றால் என்ன?

இம்மைப் பொருள்களைச் சேகரித்து வைக்கவும் அவற்றை தன்னிச்சையாகப் பயன்படுத்தவும் தனி மனிதனுக்குரிய உரிமை.

2. இந்த உரிமையை மறுப்பது யார்?

பொதுவுடைமைக் கட்சிக்காரர் இதை மறுக்கின்றனர்.

3. தனி உரிமையை நாம் ஆதரிக்க வேண்டுமா?

ஆம், ஏனெனில் அது இயற்கை உரிமை. அதனால் மனிதன் சுதந்தரத்துடன் வாழலாம்; தன் குடும்பத்தைக் காத்து நடத்தலாம்.

4. கூட்டுரிமை நல்லதா? தனிச் சொத்துரிமை நல்லதா?

நடைமுறையில், தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் தனிச் சொத்துரிமையே தலை சிறந்தது. மக்கள் ஊக்கத்துடன் உழைப்பார்கள். நாடு வளம்பெறும்.

9. தனிச் சொத்துரிமையின் சமூகப் பொறுப்பு

தனிச் சொத்துரிமையினால் சமூகத்தில் இத்துணை தீமைகள் உள்ளன என்கின்றனர் பொதுவுடைமைக் கட்சியினர். தீமை தனிச் சொத்துரிமையினின்று வருவதில்லை. தனிச் சொத்துரிமை தனிமனிதனுக்கு மட்டும் என்று முதலாளித்துவம் எண்ணுகிறது. அது தவறு பொது நலத்துக்கு மட்டும் என்று எண்ணுகிறது பொதுவுடைமை. அதுவும் தவறு. உண்மை யாதெனில், தனிச் சொத்துரிமைக்கு இரட்டிப்பான கடமையுண்டு — தனி மனிதனுக்கும் பொது நன்மைக்கும் அது பயன்பட வேண்டும்.

மனிதன் சமூகப் பிராணி. தன் தேவை பலவற்றிற்கும் அவன் சமூகத்தைச் சார்ந்துள்ளவன். ஆதலின், ஒருவர் ஒருவர் உதவிகொண்டு பொது நலத்தைப் பெருக்கவேண்டும். இதற்கு மாறாக, ஒருவன் தனக்குரிய பெருஞ் செல்வத்தைத் தன்னலவாதியாகக் குதிரைப் பந்தயத்திலும், மிதமிஞ்சிய, இன்ப வாழ்விலும் வீணாக்குவானாகில், அவன் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டிய மாபெரும் மறச்செயலைச் செய்கிறான். தானும் பயன்படுத்தாது, பிறருக்கும் பயனில்லாது. செல்வத்தை இரும்புப் பெட்டியில் பூட்டிவைத்துத் தெய்வமாக வழிபடுகிறவன் கடைந்தெடுத்த முட்டாள். தனிச் சொத்துக்குச் சமூகப் பொறுப்புண்டு.

இறைவன் இவ்வுலகினில் கொடுத்துள்ள அனைத்தும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு அன்று. அவை எல்லா மக்களுடைய நலனுக்காகவும் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலின் அவை அனைவருக்கும் பயன்தரும் முறையில் வழங்கப்படவேண்டும். தனிச் சொத்துரிமை செல்வம் படைத்த ஒரு வகுப்பினரது தனி உரிமையாக இல்லாது. எல்லாருமே தங்களது என்று சொல்லுமளவுக்குச் சிறிது சொத்து வைத்திருக்கவேண்டும். அவ்வாறு அவர்கள் அடைவதற்காகிலும் வழி செய்ய

வேண்டும். எழுத்தாளர்கள். பணியாளர், தொழிலாளர் போன்ற அனைவரும் தங்கள் சம்பளத்திலிருந்து எதிர்காலத் தேவைக்குத் தங்களுடையது என்று பயன்படுத்துவதற்குச் சேர்த்து வைக்கக்கூடிய அளவு சம்பளமாகப் பெறவேண்டும். ஆகையால் பெரிய முதலாளிகளும், பணம் படைத்தோரும் போதிய சம்பளம் கொடுக்கவேண்டும், பிறர் தங்கள் உழைப்பினாலும், முயற்சியினாலும் இவ்வுலகப் பொருள்களை பெருக்கி வசதியாக வாழ்வதற்குப் பணம் படைத்தோர் தங்கள் செல்வத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தித் தடை செய்யக்கூடாது. இது தனிச் சொத்துரிமையின் சமூகக் கடமையாகும்.

ஆனால் —

1. உலகப் பொருளைப் பயன்படுத்த எல்லா மக்களுக்கும் உரிமையுண்டு என்பதனால் ஒவ்வொருவரும் தன் விருப்பம்போல அளவு மீறிச் சேகரிக்கக்கூடாது. அதற்கும் ஓர் எல்லை இருத்தல் தேவை. இத்தகைய வரம்பை அரசு விதிக்கலாம். அரசு தன் சட்டங்களினால் அளவு மீறியுள்ள சொத்தைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் தனிச் சொத்துரிமையே ஒழிக்குமளவிற்குச் சட்டங்களை அமைக்கக் கூடாது. ஒரு குடும்பத்திற்கு வசதியான வாழ்வுக்குப் பத்தாயிரம் ரூபாய் வேண்டியிருக்கிறது. அந்தக் குடும்பத்தின் நிலத்திலிருந்து மட்டும் இருபதாயிரம் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். அரசு தன் சட்டங்களினால் எத்தனை வேலி நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று வரம்பு கூறலாம். ஆனால், தேவைக்கு மேல் 10 அல்லது 20 வேலி நிலம் விட்டுக்கொடுப்பதோடு, எடுக்கும் நிலத்துக்குத் தக்க முறையில் நியாயமான ஈடு கொடுக்க வேண்டும். அரசு ஈடு கொடாமல் நிலத்தை அபகரித்தால், அது பகல் கொள்ளை யாகுமேயன்றி, நீதியுள்ளதாகாது.

2. அரசு வரியின் வழியாகப் பணத்தைப் பெருக்கி மக்களுக்கு நலன் தரும் பல சேவைகளைச் செய்யலாம். வரி போடும்போது செல்வர் கொடுக்கக்கூடிய வரியாயிருக்க, வேண்டும், வருமானவரி, உல்லாச வாழ்வுக்குரிய பொருள்கள்

மீது வரி இதுபோன்றவற்றை அரசு வசூலிக்கலாம். இவ்வாறு அவர்களிடமிருந்து மிகுதியாகப் பெறும் பணத்தை எளியோர் முன்னேறுவதற்குப் பயன் படுத்தலாம். மக்கள் உண்ணும் அரைவயிற்றுக் கஞ்சிக்கு வாங்கும் அரிசிக்கு விற்பனை வரி கொடுக்க வேண்டியிருப்பின், இதனால் பயனடைவோர் யார்? எளிய மக்களா? விற்பனை வரி என்று சொல்லும் வரி உண்மையிலேயே வாங்கும் வரி தானே.

3. தொழிற்சாலைகளையும் தனியார் போக்குவரத்தையும் அரசு தன்னுடையாக்குவது முறையா? பொதுவில் தனியாரும் குடும்பமும் தனிச் சங்கங்களும் நடத்தக்கூடியனவற்றை அரசு தன்னுடையதாக்கக் கூடாது. அவற்றை ஏற்றுப் பொருள் சேதப்படுத்துவதில் பயனில்லை.

பெரும்பாலும் எல்லா மக்களுக்கும் மிகத் தேவையான அல்லது உதவக்கூடிய தண்ணீர், மின்சாரம், சாலைகள் போன்றவற்றை அரசு எடுத்துக்கொள்ளும். ஆனால், அவற்றிற்கு ஈடு செய்யாது ஒருபோதும் அரசு அவற்றைக் கைப்பற்றக் கூடாது. அரசு இவற்றை எத்துண விரைவில் தனிச் சங்கங்களிடம் ஒப்படைக்கிறதோ, அத்துணை அரசுக்கும் நல்லது; அந்தத் தொழிலும் திறம்பட நடக்கும். ஆனால், அரசினரின் இன்றைய தவறான மனப்பான்மை தான் நடத்தினால் எல்லாவற்றையும் திறமையாக நடத்தக் கூடும் என்பதாகும்.

4. தனிச் சொத்து பொது நலத்துக்கும் உதவவேண்டும். இதுவே படைப்புகளை நம்மிடம் ஒப்படைத்துள்ள இறைவனின் நோக்கம். ஆகையால், படைப்புகளை நன்முறையில் பயன்படுத்தி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, அதை எல்லாருக்கும் பயன்பட வழிகோலவேண்டும்.

மனிதனுக்குப் பல தேவைகள் உள. உணவு, உடை, உறைவிடம், கல்வி, நோய்க்கு மருந்து இவை யாவும் ஒவ்வொருவருடைய இன்றியமையாத தேவைகள். இவற்றை நிறைவு படுத்தினால்தான் சமூகத்தில் மனிதனுக்குரிய வகையில் வாழலாம்.

இத்துடன் சிலருக்கு வாழ்க்கை நிலைக்குரிய பொருள்களும் தேவைப்படுகின்றன. மருத்துவருக்குச் சிறு ஊர்தி (கார்) இன்றியமையாத தேவையாகிறது. ஒரு குடியானவனுக்கோ அது உல்லாச உயர் வாழ்வுக்குரியதாகும். ஓர் அமைச்சர் இரு அறைகள் கொண்ட ஒரு சிறு வீட்டில் வாழ்வது முறையன்று. அவரது உயர்வுக்குப் பெரிய வீட்டில் பல வசதிகளுடன் வாழவேண்டும்.

இவ்வாறு வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களும், வாழ்க்கை நிலைக்குரிய பொருள்களையும் தவிர மீதியுள்ள பொருள்கள், நிலபுலம், பெருந்தொகை இவைபோன்ற யாவும் தேவையற்ற பொருள்கள் எனலாம். இந்தத் தேவையற்ற பொருள்களைத் தனியார் தங்கள் விருப்பம்போல் வீணாக்காது, சமூகப் பொது நலனுக்குப் பயன்படுத்தக் கருத்தாய் இருக்கவேண்டும் ; அது தங்களது கடமை என்று உணர வேண்டும். அந்த மிதமிஞ்சிய பொருளை அளவுமீறிய உல்லாச வாழ்வில் செலவிடுவதும், வீணாக்குவதும் சமூகக் குற்றமாகும். தங்களைச் சுற்றியுள்ள மக்கள் வறுமையில் வாடுவதை அறிந்தும் இவ்வாறு அழிப்பது குற்றமன்றோ ?

இந்த மிஞ்சிய பொருளைப் பொதுத் தொழில்களில் போடலாம்; பலருக்குத் தொழில் தரக்கூடிய உற்பத்தி நிலையங்களைத் தொடங்குவதற்கு முதல் கொடுத்து உதவலாம்; அனாதை விடுதிகள். இலவச மருத்துவ நிலையங்கள். கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு நன்கொடையாக அளிக்கலாம். நேரடியாகவும், எளியோருக்குத் தர்மம் கொடுத்துதவலாம். இவ்வாறு எத்தனையோ சமூகத்துக்குப் பயன்தரும் முறையில் விடலாம். அதற்கு மாறாக இவ்வாறு செய்யாது. பணத்தைப் பெருக்கிச் சேமித்து மூட்டைகட்டி வைப்பார்களாகில், அரசு குறுக்கிடவேண்டும், சட்ட முறையில், அதை நன்முறையில் பயன்படுத்த வழிவகைகளைத் தேடவேண்டும்,